விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 01 செவ்வாய்க்கிழமை (17.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## முன்னாள் இராணுவத் தளபதி சரத் மீது நேற்று மேலும் ஒரு வழக்குத் தாக்கல்

### பொன்சேகாவின் செயலர் மீதும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா இராணுவத்தில் இருந்து ஓடியவர்களை தனது ஜனாதிபதித் தேர்தல் பிர சாரப் பணிகளுக்காக சேர்த்துக்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் மீது கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பொன்சேகாவின் செயலாளர் கப்டன் செனக டி சில்வாவும் இதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து ஓடிய 10 பேரை சட்டவிரோதமாக சேர்த்துக்கொண்டார். அவர்களுக்கு உறைவிடமும் பணமும் அளித்தார். அரசுக்கு எதிராக இராணுவப்புரட்சி செய்யும் முயற்சியில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் நேற்றிரவு தென்பகுதி இளைஞர் மீது தாக்குதல்

### மூவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து வியாபார நோக்கத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்த இளைஞர்கள் மீது 8 பேர் அடங்கிய குழுவொன்றினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். மற்றொருவர் சிறுகாயத்துக்குள்ளானார்.

இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் கொக்குவில் அம்மன் வீதியில் ஆடியபாதம் வீதிக்கு அண்மையில் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

லொறி ஒன்றில் வந்த தென்பகுதி இளைஞர்கள் சிலர் (20 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழர்கள் யார் வந்தாலும் அவர்கள் விடுதலைப்புலிகளா?

### கனேடிய மக்கள் கண்ணீர்மல்கக் கேள்வி

(ரொரன்டோ)

இலங்கையிலிருந்து வேறு நாடுகளுக்கு அகதி அந்தஸ்துக் கோரும் அனைவரும் விடுதலைப்புலிகளா? அவர்களுக்கு ஏன் அகதி அந்தஸ்து கொடுக்கக் கூடாது எனக் கனேடிய மக்கள் அரசைக் கோரியுள்ளனர். சன் சீ என்ற கப்பலில் சென்றுள்ள 490 ஈழத் தமிழர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைக் கோரியுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மொபெட்ஸ் மோட்டார் சைக்கிள் செலுத்த புதிய விதிமுறை விரைவில்

### தலைக்கவசம் அணிவது கட்டாயமாம்

(கொழும்பு)

சக்தி வலு குறைந்த மொபெட்ஸ் மோட்டார் சைக்கிள்களினால் அதிகமாக ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக புதிய சட்டம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் பி.டி. எல்.தருமபிரிய தெரிவித்தார்.

அதிகளவான மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் 49சிசி மோட்டார் சைக்கிள்களினால் ஏற்படுவதாகவும் இந்த வாகனங்களை எதிர்காலத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் 49சிசி மொபெட்ஸ் மோட்டார் சைக்கிள்களை ஓட்டுவதற்குத் தலைக் கவசம் அணிவதுடன் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டும் எனும் விதிமுறையை இறுக்கமாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

எம்.வி.சன் சீ கப்பலில் கனடாவைச் சேர்ந்த சுமார் 500 இலங்கைத் தமிழர்கள் உண்மையான அகதிகளா என்பது குறித்த விசாரணைகளைக் கனேடிய அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி அகதிகள் தற்போது வான்கூவரிலுள்ள தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தமது அடையாளத்தை–தாம் இலங்கையிலிருந்து வந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதே அகதிகள் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சினை எனத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு எதுவும் விடப்படவில்லை!

### மாவை.சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துத் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு தமக்கு இதுவரையில் உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அழைப்பு விடுக்கப்பட்டாலும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பது குறித்துக் கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலை (20 ஆம் பக்கம் பார்க்க)

குறைந்த வட்டி அதிகூடிய பணம்

பவுணுக்கு ரூ. 29,000 வரை

மாதாந்த வட்டி 1.16% மட்டுமே!

துரித இலக்கம்: 011 2353806

கொமேர்ஷல் வங்கியின் தங்க நகை அடகுச் சேவை

COMMERCIAL BANK

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான அழைப்பிதழ் தபாலில் அனுப்பப்பட்டது

### சிவாஜிலிங்கம் விளக்கம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் ஐந்தாவது கூட்டத்திற்கான அழைப்பிதழ் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்ல முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதாகத் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போது நாட்டில் இல்லாத காரணத்தினால் அவ் அழைப்பிதழ் கிடைக்காமல் இருந்திருக்கலாம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடு திரும்பியதும் தமிழ்க் கட்சிகள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கனடா சென்றவர்களில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கனடாவில் சரணாகதி அடைந்துள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் கப்பலிலேயே உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸ் அறிவித்துள்ளனர்.

கனடாவை நோக்கி பயணித்து வந்த கப்பலில் மூன்று வாரங்களுக்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

37 வயதான இலங்கையர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவரது மனைவியும் பிள்ளைகளும் இலங்கையில் வசித்து வருவதா (20 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BCHS

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
- FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
- FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.

➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்திலை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

**IELTS** (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

**(We guarantee minimum band 6.0 Upwards)**

**SPOKEN ENGLISH (For School Leavers & Workers)**

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகிறது. வகுப்புகள் சனி, ஞாயிறு, வார நாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

**Diploma in English** **Advanced Diploma in English**

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)

Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 15.08.2010, 18.08.2010, 22.08.2010 காலை : 10.00 மணி மாலை : 04.00 மணி

## தவறிவிட்டது

லோகநாதன் கணேந்திரராஜா என்பவரது குடும்ப அட்டை, மருத்துவச் சான்றிதழ், பொலிஸ் ரிப்போட் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பைல் யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில் 14.08.2010 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு : இல. 75, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொலைபேசி இல. 0779480551

(2186)

13.08.2010 முதல்

கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா (நாதன்ஸ்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00





## போய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

**கே.ரவிக்குமார் சாஸ்திரி**
**0770790898**

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

**குறைந்த செலவில் கூறுவார்**

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேட பயணம், எதிரிகள் கண் திருஸ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல்.


இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

**திலக் லொச்** அறை இல: 01
711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி சந்தி)


கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை

(2188)

# NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD



## NALIN இன் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்



| Monitor | |
|---|---|
| 16" LCD Asus | 13500/- |
| 16" LCD Aoc | 12200/- |
| 16" LED ViewSonic | 14750/- |
| 17" LCD Aopen | 15000/- |
| 19" LCD Aoc | 15250/- |
| 19" LCD LG | 15500/- |
| 19" LCD Acer | 16000/- |
| 19" LCD Dell | 16750/- |
| 19" LCD Asus | 16700/- |
| 19" LCD ViewSonic | 19500/- |
| 19" HP Compaq | 17900/- |
| 23" LCD Acer | 27000/- |
| 17" SQURARE LCD HP | 25000/- |
| 17" SQURARE LCD AOC | 15500/- |
| 17" CRT Atlantis | 7500/- (1Y) |

| Mother Board | |
|---|---|
| Asus G31 | 6250/- |
| Asus G41 DDR3 | 8500/- |
| Asus P7H55 | 17000/- |
| Foxconn G31 | 5600/- |
| Foxconn G41 | 6500/- |
| Foxconn H55 | 14000/- |
| Intel DG41 | 7400/- |
| Intel DG43 | 10800/- |
| Intel DG45 | 14900/- |
| Intel DH55 | 14900/- |

| UPS | |
|---|---|
| Power III | 3950/- |
| Luminous | 4800/- |
| APC | 6800/- |

| Memory | |
|---|---|
| 1GB Kingston -DDR 2 | 2975/- |
| 2GB Kingston - DDR2 | 5800/- |
| 2GB Kingston - DDR3 | 7250/- |
| 2GB Transcend - DDR3 | 7750/- |

| Hard Disk | |
|---|---|
| WD 40GB (SATA) | 3200/- |
| Sam 160GB (SATA) | 4900/- |
| Sam 320GB (SATA) | Ask |
| Sam 750 GB (SATA) | 7400/- |
| Sam 1000GB (SATA) | 9400/- |

| | |
|---|---|
| 2GB Flash | 975/- (1Y) |
| 4GB Flash | 1350/- (1Y) |
| 8GB Flash | 2500/- (1Y) |

| Processor | |
|---|---|
| 2.7 Dual Core | 8500/- |
| 2.8 Dual Core | 8750/- |
| 2.93 Core 2 Duo | 14500/- |
| 2.93 i3 | 15600/- |

| DVD Writer | |
|---|---|
| LG (IDE) | 3700/- |
| HP (SATA) | 3250/- |
| Sam (SATA) | 3500/- |
| Liteon (SATA) | 3300/- |
| Sony (SATA) | 3800/- |

| | |
|---|---|
| HP Pro 2000 Business PC | 82000/- |
| Slim Top | 36000/- |

| Printer | |
|---|---|
| HP D1660 Desk Jet | 4500/- |
| HP P1102 Laser Jet | 15900/- |
| HP CP1215 Laser Jet | 41000/- |
| Cannon Pixma iP2770 | 5400/- |
| Epson LQ 300+II Dut matics | 22500/- |

| Scaner | |
|---|---|
| Casing powerloqic | 3000/- - 10000/- |
| Key Board | 350/- - 4500/- |
| Mouse | 250/- - 3800/- |
| POWER SUPPLY UNIT | 1500/- - 12750/- |

| | |
|---|---|
| WEB CAM | 1900/- - 3200/- |
| COMPUTER TABLE | 2700/- |
| HSDPA 7.2 (MBPS) | 7100/- |

**கணனியாக கொள்வனவு செய்பவர்களுக்கு மேலும் சிறந்த விலைக்கழிவு வழங்கப்படும்**

கணனிகளுக்கு 3 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன், கொள்வனவு செய்பவர்களுக்கு Free Gift வழங்கப்படும். (Computer Accessories)

எம்மிடம் மிகவும் மலிவான விலையில்
**D-Link** **TP-LINK**
Router, Switch, Directional Antenna (Wired and Wireless)
உத்தரவாத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்

hp LEXMARK Canon SAMSUNG xerox
**Original Toner, Cartridge**
களை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்





எமது மேலதிக சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு எமது நிறுவனத்துடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்



SONIQEAR WOOFER & SUB WOOFER
மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்

security camera & spy camera
Inter com என்பன
ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு எமது வளர்ச்சியில் பங்காற்றிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஊழியர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

NALIN information Technologies Pvt Ltd

195/4 PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974

# சுபீட்சம் நிறைந்த எதிர்காலத்திற்காக...



## CDB MONEY EXCHANGE

*Authorized Money Dealer*

உங்கள் குடும்பத்தினர் வெளிநாட்டில் பாடுபட்டு உழைத்து இந்நாட்டுக்கு அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு ஆகக்கூடுதலான ரூபாய் பெறுமதியை CDB இப்பொழுது வழங்குகிறது. அது மாத்திரமன்றி எங்களுடைய ஏனைய நிதிச் சேவைகளையும் நீங்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ள இது ஓர்அரிய சந்தர்ப்பம்!

- கண்ணியமான சேவை
- பாதுகாப்பான, சட்டபூர்வமான சேவை

Licence No: ECD/IN/AUT/MC/149A
இல.208, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : **021 2221585-6**

Licence No: ECD/IN/AUT/MC/151
இல.79, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
தொலைபேசி : **024 2225862-3**

CDB சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் உங்கள் நண்பன்

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட்**
பிரதான அலுவலகம் - இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10
1988இன் 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

TARGET ASSOCIATES

# இன்று ஒரு தகவல்

## இதயத்துடிப்பு மானி.

1816 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அன்று பிரான்ஸில் உள்ள ஒரு மருத்துவமனையில் புதிதாக ஒரு டாக்டர் வேலைக்கு சேர்ந்திருந்தார். அவரது பெயர் ரெனேலனக்.

அவர் அன்று காலையில் அந்த மருத்துவமனையைச் சுற்றி பார்த்துக் கொண்டு வந்தார்.

நோயாளர் விடுதியில் ஒரு இளம் பெண் படுத்திருந்தாள். அவளுக்கு இருதய நோயாக இருக்கலாம் என்பது மற்ற டாக்டர்களின் சந்தேகம்.

அந்தக்காலத்தில் ஒருவருடைய இதயத்துடிப்பை தெரிந்து கொள்ள வேண்டுமானால் நோயாளியின் மார்பில் காதை வைத்துப் பார்த்துத்தான் தெரிந்து கொள்வார்கள்.

ஆனால் இந்தப்பெண்ணோ இளம்பெண். டாக்டரும் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பவர். அதனால் பரிசோதிக்கத் தயங்கினார். பின் சிறிது நேரம் யோசித்தார்.

திடீரென்று அவருக்கு ஒரு ஞாபகம் வந்தது.

அன்று விடியற்காலையில் தோட்டத்தில் வாக்கிங் போனபோது இரண்டு சின்னப் பையன்கள் ஒரு மரக்கட்டையை வைத்து விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தார்.

அது ஒரு நீளமான மரப்பலகை. அதன் ஒரு முனையில் ஒரு பையன் தன் காதை வைத்துக்கொண்டிருந்தான்.

மறு முனையில் இன்னொரு பையன் அந்த மரப் பலகையில் ஒரு ஆணியால் கீறிக் கொண்டிருந்தான். ஒரு முனையில் ஆணியால் கீறும் போது மறு முனையில் காதை வைத்து இருக்கும் பையனுக்கு அந்தச் சத்தம் துல்லியமாகக் கேட்டது.

அந்த டாக்டருக்கு காலையில் பார்த்த அந்த விளையாட்டு ஞாபகத்துக்கு வந்தது. உடனே ஒரு நீளமான காகிதத்தை எடுத்து அதை உருளை மாதிரி உருட்டினார். ஒரு முனையை அந்த நோயாளியின் மார்பில் இடது பக்கம் வைத்தார். இன்னொரு முனையில் தன்னுடைய காதை வைத்தார்.

என்ன ஆச்சரியம்!

நோயாளியின் மார்பில் நேரடியாக வைத்துக் கேட்பதைவிட இதயத்துடிப்பு துல்லியமாகக் கேட்டது.

இதயத்துடிப்பு மட்டுமல்ல. மூச்சு இழுத்துவிடுவது, திரவப் பொருட்களின் அசைவு உட்பட எல்லா சத்தமும் தெளிவாக கேட்டது.

கிரேக்க மொழியில் ' ஸ்வெத்தாஸ்' என்றால் மார்பு. 'ஸ்கோப்பின்' என்றால் பார்ப்பது என்று அர்த்தம்.

அதனால் டாக்டர் ரெனேலனக் தான் கண்டு பிடித்த கருவிக்கு 'ஸ்டெதஸ்கோப்' என்ற பெயர் வைத்தார்.

அவரே முதல் மொடலையும் செய்தார். அளவு ரொம்பப் பெரிதாக இருந்தது. சுலபமாக எடுத்துக் கொண்டு போக சிரமமாக இருந்தது.

அதனால் அவரே அதை இரண்டு பிரிவாக தயாரித்தார். அந்த இரண்டு பிரிவையும் டாக்டர் தன்னுடைய கோட்டுப் பொக்கற்றில் வைத்திருக்கலாம். தேவைப்படும் போது ஒன்றாக சேர்த்துவிடலாம்.

தன்னுடைய இந்தக் கண்டுபிடிப்பைப்பற்றி அவர் ஒரு புத்தகம் எழுதினார். விற்பனை அமோகமாக நடந்தது. பணமும் புகழும் வந்து சேர்ந்தது.

பணமும் புகழும் வந்து சேர்ந்தது போலவே அவருக்கு நோயும் வந்து சேர்ந்தது.

அது என்ன நோய் என்று கண்டு பிடிப்பதற்கும் அவர் கண்டு பிடித்த கருவிதான் உபயோகப்பட்டது. அவரே அதைக் கண்டுபிடித்தார்.

அவருக்கு வந்திருந்தது காசநோய். 1826 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி உலகத்தின் முதல் ஸ்டெதஸ்கோப்பைக் கண்டு பிடித்த டாக்டர் ரெனேலனக் காலமானார்.

அவர் இறப்பதற்கு முன்னர் மரத்தால் செய்து வைத்திருந்த ஸ்டெதஸ்கோப்பை தனக்கு வேண்டப்பட்ட ஒரு டாக்டரிடம் கொடுத்து என்னுடைய சொத்துக்களிலேயே மிகவும் உயர்ந்தது இது என்று சொன்னாராம்.

அதன் பின் 3 வெள்ளைக்காரர்கள் சேர்ந்து இந்தக் கருவியில் சில மாற்றங்களைச் செய்தார்கள். ஆனால் 1829 இல் லண்டனில் டாக்டர் நிகோலஸ் என்பவர் ஒரு காதால் இதயத்துடிப்பை கேட்பதை விட இருகாதாலும் கேட்பது தான் சரியாக இருக்கும் என்ற ஒரு கருத்தை வெளியிட்டார்.

அதன் பின் நீண்ட காலத்துக்குப் பின் 1852 இல் ஜோர்ஜ் காமான் என்பவர் இறப்பர் குழாய்களை உபயோகப்படுத்தி இரண்டு காதுகளாலும் கேட்பது போன்று ஒரு புதிய வடிவத்தை அதற்குக் கொடுத்தார். அதற்குப் பின் அதில் படிப்படியாக எவ்வளவு மாற்றங்கள் இருந்தாலும் ஆரம்பத்தில் டாக்டர் ரெனேலனக் உருவாக்கிய அடிப்படை மொடலை யாரும் மாற்றி அமைக்கவில்லை என்பதுதான் முக்கியமான விடயம்.

நமக்குத் தெரிந்த ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி "நர்ஸ், நர்ஸ்" என்று கத்திக் கொண்டிருந்தார்.

நர்ஸ் அவசரமாக ஓடிவந்து என்ன விடயம் என்று கேட்டார்.

'சிஸ்டர், இங்கே பாருங்கள். உங்கள் டாக்டரை. என் நெஞ்சில் அவர் காதை வைத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்" என்றார் நோயாளி.

சிஸ்டர் பதற்றப்படாமல் "அதனால் என்ன? இந்த டாக்டர் பழைமையான விடயங்களில் மிகவும் நம்பிக்கை உள்ளவர். அதனால் ஸ்டெதஸ்கோப்பை உபயோகப்படுத்தாமல் காதை வைத்துக் கேட்கிறார். அதனால் என்ன?" என்றார்.

"ஐயோ அதற்காக இல்லை சிஸ்டர். இவர் என் நெஞ்சில் தலையை வைத்தது நேற்றிரவு 9 மணிக்கு . இன்றும் தலையை எடுக்கவில்லை. அதற்காகத்தான் உங்களைக் கூப்பிட்டேன். என்னவென்று பாருங்கள்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 17 வயதுக்குட்பட்டோருக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு அவையினால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனை தனதாக்கிக் கொண்டது.

இறுதிச் சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை எதிர்த்து விளையாடிய உடுவில் மகளிர் கல்லூரி அணி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக ஆடினர்.

அத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியும் ஆட்டத்தில் தமது விறுவிறுப்பை காட்டினர்.

எனினும் உடுவில் மகளிர் கல்லூரி அணி 38:34 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிறந்த வீராங்கனைகளாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை சேர்ந்த சோபனா, யாழ்ப்பாணக்கல்லூரி அணியை சேர்ந்த ஏஞ்சல், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த தராசுதா உடுவில் மகளிர் கல்லூரி அணியைச் சேர்ந்த திசானா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தொடரின் ஆட்ட நாயகியாக கமஷினி மில்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டிக்கான வெற்றிக் கேடயம் மற்றும் சிறப்புப் பரிசில்களையும் யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவரும் உடுவில் மகளிர் கல்லூரி அதிபருமாகிய திருமதி ஷிராணி மில்ஸ் வழங்கி கௌரவித்தார். (6)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கட்டம் கட்டமாக ஏற்றப்படவுள்ளது.

இதன்படி இன்று காலை 9 மணிமுதல் காலை 10.30 மணிவரை கெனடி வீதி சனசமூக நிலையத்திலும் காலை 10.30 தொடக்கம் 12 மணி வரை சூரியவொளி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணிவரை நித்திய ஒளி முன்பள்ளியிலும் இத்தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார். (6)

## இராசி பலன்

*17.08.2010*
*(ஆவணி 1, செவ்வாய்க்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 5.18 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 12.24 மணிவரை*
*இராகுகாலம் 3.05-4.35 மணிவரை*
*சுபநேரம் 10.35-12.05 மணிவரை*
*அட்டமி- நவமி*

**மேடம்** விஷ்ணு வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படநேரிடும்.

**இடபம்** வெளிவட்டாரப் பழக்க வழக்கம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சியான செய்தியொன்று காலை நேரத்திலேயே கேட்கும் சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்

**மிதுனம்** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணப்படும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**கடகம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், கல்வி முன்னேற்றத்திற்காக செலவு செய்வீர்கள்.

**சிங்கம்** வாகன யோகத்தில் வளம் காணும் நாள், தாய்வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** சகோதரர் வழியில் சில நன்மைகள் ஏற்படலாம், சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று முடிவுக்கு வரலாம்.

**துலாம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவினைத் தரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** குடும்ப உறுப்பினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பண வரவு திருப்தி தரும், விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறலாம்.

**தனுசு** குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்பால் மனோதைரியம் ஏற்படும், தனவரவு திருப்தியைத் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் தொடர்பால் நல்ல ஆலோசனை பெறுவீர்கள்.

**மீனம்** வரவேண்டிய பணம் வந்து சேரலாம், பிரயாணத்தின் மூலம் பெருமை கிடைக்கும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

## பேசும் படம்




வாழ்க்கைச் சுமை...

காட்சி - யாழ்.நாவலர் வீதி

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 50 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 45 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 60 |
| பயற்றங்காய் | 90 | 100 | 90 |
| லீக்ஸ் | 170 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 45 |
| கறிமிளகாய் | 70 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 80 |
| போஞ்சி | 120 | 160 | 75 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 45 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |

# சன் சீ கப்பல் விடயத்தில் கனடா உரிய முறையில் செயற்படவில்லை

## லிபரல் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கனடாவுக்கு வந்த இலங்கை அகதிகள் தொடர்பில் கனடிய அரசாங்கம் உரிய முறையில் செயற்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கனடிய லிபரல் கட்சியின் தலைவர் மைக்கேல் இனகடீப் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சன் சீ கப்பல் தாய்லாந்தில் இருந்து புறப்பட்டு கனடாவை வந்து சேரும் வரை மூன்று மாதங்கள் பிடித்தன. இந்த நாட்களில் கப்பல் கனடாவை நோக்கியே வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் கனடா ஏன் இந்த விடயத்தை தீவிரமாக ஆலோசனைக்கு எடுக்கவில்லை என மைக்கல் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போது அகதிகள் கனடாவுக்கு வந்து சேர்ந்துள்ள நிலையில் அவர்களை தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அத்துடன் விசாரணைகளின் போது இலங்கையின் உதவிகளும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என மைக்கல் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளால் பயிற்றப்பட்ட சுமார் எண்ணாயிரம் போராளிகள் கனடாவில் இருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான கனடாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மார்டின் கொலகொட்டின் தகவலை ஆதாரம் காட்டி இந்த செய்தியை இலங்கை அரசாங்கத்தின் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

கனடிய அரசாங்கத்தின் குடிவரவு சட்டத்தில் ஓட்டைகள் உள்ளன. இதனை புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதாக கொலகொட் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தற்போது கனடாவுக்கு வந்துள்ள இலங்கை அகதிகளுக்கு புகலிடம் வழங்குவது புலிகளுக்கு புகலிடம் வழங்குவதற்கு சமமானதாகும் என கொலகொட் குறிப்பிட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (6)

# செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவிருந்த கற்றல், கற்பித்தல் உபகரண கண்காட்சிக்கான செயலமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் அன்றைய தினம் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்குமாறும் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (6-4)

# ஒளடதச் சட்டத்தை மீறிய 150க்கும் மேற்பட்ட மருந்தகங்கள் மீது வழக்கு

(கொழும்பு)

இந்த வருடத்தில் ஒளதடச் சட்டத்தை மீறிய 150க்கும் அதிக மான மருந்தகங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா கத் தெரியவருகிறது.

இந்த வருடத்தில் மாத்திரம் ஒளதட சட்டத்தை மீறிய 300க்கும் மேற்பட்ட மருந்தகங்கள் சுற்றி வளைக்கப்பட்டதாகத் தேசிய ஒளடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் பெனரகம தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென சுட்டிக்காட்டியவர் மருந்தகங்களின் உரிமையாளர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார். (6)

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் கப்பலில் உயிரிழந்துள்ளார்

## கனடிய பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

கனடாவில் சரணாகதி அடைந்துள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் கப்பலிலேயே உயிரிழந்துள்ளதாக அந் நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கனடாவைநோக்கி பயணித்த வந்த கப்பலில் மூன்று வாரங்களுக்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

37 வயதான இலங்கையர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவரது மனைவியும்பிள்ளைகளும் இலங்கையில் வசித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோய் காரண மாக குறித்த நபர் உயிரிழந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உயிரிழந்தவரின் சடலம் கடலில் எறியப்பட்டதாக சக புகலிடக் கோரிக்கையாளர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.

சிறிய கப்பல் ஒன்றில் பாரியளவிலான புகலிடக் கோரிக்கையாளகள் எவ்வித அனர்த்தமும் இன்றி பயணித்தமை ஆச்சரியமளிப்பதாக கனடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புகலிடக் கோரிக்கையாளர்களின் உடல் நிலை சாதகமாக காணப்படுவதாகவும் ஆறுபேர் மட்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கனடிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)


அமோக விற்பனையில்




தரம் 5 மாணவர்களுக்கு

வெற்றித்தேர்வு ஆசிரியர்
திருகோணமலை
எஸ்.கணேசலிங்கத்தின்
32 பக்கங்களைக் கொண்ட
எதிர்பார்க்கை வினாக்கள்
அடங்கிய புலமைப்பரிசில்
இறுதிக் கருத்தரங்கின்
விஷேட கையேடு...
(விடைத்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம், சாவகச்சேரி
நல்லூர்த் திருவிழாவின் விஷேட விற்பனைசாலையிலும்...

நெல்லியடியில்- மொடேர்ன் ஸ்ரோர்ஸ்

கிளிநொச்சியில் - அறிவுநதி புத்தகசாலை

வெளியீடு - யுனிலங்காஸ் 32, சென். அன்ரனீஸ் மாவத்தை, கொழும்பு 13. 0776258778



SKY Cable

# அறிவித்தல்

இலங்கை முழுவதும் கேபிள் TV ஒளிபரப்பு உரிமம் பெற்ற (Mass Media and TRC SL), Sky Cable (Pvt) Ltd ஆகிய நாம்,



❖ யாழ்ப்பாணம்
❖ கிளிநொச்சி
❖ முல்லைத்தீவு
❖ வவுனியா

ஆகிய மாவட்டங்களுக்கான Exclusive Network Manager ஆக Tenstar Network (Pvt) Ltd. நிறுவனத்தை நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு

**Sky Cable (Pvt) Ltd.**
7A Hawlock Place
Colombo - 5
T.P : 0774232227

**Tenstar Network (Pvt) Ltd.**
116D, Ramanathan Road,
Jaffna.
T.P : 0772233282
0773276504, 0777917790

(2189)



புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர்களின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த புதின்கிழமை நிலைய முன்றலில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் நடராசா மங்கல விளக்கேற்றுவதையும், முன்பள்ளி சிறுவர் களின் பாண்ட் வாத்திய நிகழ்வையும் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு *உதித்தனன் உலகம் உய்ய* எனும் விடயம் பற்றி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தம் சொற் பொழி வாற்றவுள்ளார்.

* * *

வியாபாரி மூலை இன்பர் சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தை யொட்டி நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ் வில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு *விநாயகர் வழிபாடு* என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நித்திய தசீதரன் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (6-4-35)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி -நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரதன் நாராயணர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 7 மணிக்கு கைலாசவாகன திருவிழாவும் 31ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு சப்பறமும் முதலாம் திகதி மு.ப. 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 2ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதர் பாத பூசையும் மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6)

## விசேட கூட்டங்கள்

இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையை பற்றிய எக்காளம் முழங்கப்போகிறது. விசேட கூட்டங்கள் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் 21ஆம் திகதி சனிக் கிழமை வரை தினமும் மாலை 4மணிக்கு 104 , இராசாவின் தோட்டம்,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள பெத்தேலில் இடம் பெறவுள்ளது.

கூட்டத்தில் தலைமைப்போதகர் ஜோன் கிற்றோ பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். (6)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தினால் நல்லூர் முருகன் மஹோற்சவத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்வான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை திருமதி சாந்தகுமாரி விஜயகுமார் (பாட்டு), கே.பத்மநாதன் (வயலின்),பி.சியாம் கிருஸ்ணா (மிருதங்கம்),எஸ். மதிரூபன் (கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிமுதல் 6 மணி வரை *மெய்ஞானம் காட்டும் விஞ்ஞானம்* என்னும் விடயம் பற்றி சு.விஸ்வநாதன் சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார்.

தொடர்ந்து ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்றம், நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

## அம்பன்,செம்பியன்பற்று பிரதேச சபைகளை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(குடத்தனை)

பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகங்களான அம்பன் பிரதேச சபை, செம்பியன் பற்று பிரதேச சபை ஆகிய வற்றை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.

கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் அம்பன் பிரதேச சபை மூடப்பட்டுள்ளதுடன் இப் பகுதியில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப் பட்டும் இப்பிரதேச சபை இயங்காமலேயே உள்ளது.

இதனால் மக்கள் தங்களது தேவைகளுக் காக மந்திகையிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபை செயலகத்துக்கு செல்கின்றனர்.

இதே போன்று செம்பியன் பற்று பிரதேச சபையும் மூடப்பட்டுள்ளது.கடந்த 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையால் அப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து இச்சபையும் மூடப்பட்டமை குறிப் பிடத்தக்கது.ஆதலால்,

பொது மக்களின்நலன் கருதி இப் பிரதேச சபைகளை மீள ஆரம்பிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-4-63)

## துர்க்கையம்மனுக்கு இன்று மஞ்சத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று மஞ்சத் திருவிழா இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 6.30 மணிக்கு அம்பாள் திருமஞ்சத்தில் பவனி வரும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (6)

## விரிவுரையாளருக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல் கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்திற்கு ஒப்பந்த அடிப் படையிலான தாதியியல் விஞ்ஞான விரிவுரையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றில் தாதியியல் விஞ் ஞான மாணிப்பட்டம் பெற்றவராக இருத்தல் வேண் டும். விண்ணப்பப் படிவங்களை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட எனும் முகவரியில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட் கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ் பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்கு சனசமூக நிலைய மலரும் மலர்கள் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி சிவரஞ்சினி சத்திய சீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி பி.தனபாலன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக அராலி பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி ப.மகேசன், ஓய்வு பெற்ற அதிபர் சி.சிவஞானபோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## கல்விமாணி மாணவர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி3 ஆம் வருட மாணவர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இறுதிப் பரீட்சை பற்றிய முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட இருப்பதால் சகல 3 ஆம் வருட மாணவர் களையும்செயல்நிலைஆய்வு தொடர்பானசெயற் பாட்டு விடயங்களுடன் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (6)

## திறந்த பல்கலைக்கழக அறிவித்தல்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2010/11 கல்வியாண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியினைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 19 ,20 ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளன. ஆசிரிய மாணவர்கள் தாம் கடமையாற்றும் பாடசாலை அதிபரிடமிருந்து சேவைக்கால உறுதிப்படுத்தற் கடிதம் , 10 வார கற்பித்தற் பயிற்சிக்கான அனுமதிக்கடிதம் என்பவற்றைப் பெற்று பதிவின் பொது தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

* * *

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்ட மாணிக்கற்கை நெறி மீள் பரீட்சார்த்திகளுக் கான ஆங்கில தரப்படுத்தல் பரீட்சை எதிர் வரும்28ஆம் திகதி சனிக்கிழமை நடை பெற வுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று பூர்த்தி செய்து இன்று ஒப்படைக்கவும்.

* * *

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேல் விசேட தேவைகள் சார் கல்வி டிப் ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்ப முடிபுத்திகதி எதிர்வரும் 27ஆம் திகதி வெள் ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற் கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந் திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## தேசிய பாதுகாப்புத் தினம் குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ. எச்.எம்.பௌசியின் ஆலோசனையின் பேரில் அமைச்சரவையினால் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.

இதற்கமைய இவ்வருடம் தேசிய பாதுகாப்பு தினம் யாழ்.மாவட்டத்தில் நினைவு கூரப் படவுள்ளதுடன் இதற்கான ஒழுங்கமைப்புக் கள், இதனை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான கலந்துரை யாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் அனர்த்த முகாமைத் துவ நிலைய அதிகாரிகளால் நடத்தப்படவுள் ளது. (6)

## வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைப்பு நடவடிக்கைகள்

(பருத்தித்துறை)

வன்னி மாவட்டத்தில் பல மில்லியன் ரூபாய் செலவில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அபிவிருத்தி நிர்வாகத்தின் நிதியுதவியுடன் வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் பல வீதிகள், கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு கட்டடங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று கட்டடங்களும் எட்டு வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேலும் இந்நிதியில் யுத்தத்தினால் அழிந்து போன பிரதேச செயலகம் ,உணவுக் களஞ்சியம் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயம் என்பனவும் கரைச்சி,கண்டாவளை ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன் யாழ். மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் நாகர் கோவில் சந்தைக் கட்டடமும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (6-10)

# ஆவணி மாதத்தில் பிறந்தவர்களின் பலன்கள்

சூரியன் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் மாதம் ஆவணிமாதம்ஆகும். நாம் நமது சொந்தவீட்டில் இருக்கும் பொழுது மிகவும் சந்தோஷமாக இருப்போம்.அதைப் போல நவக்கிரகங்களில் ராஜகிரகம் என்று வர்ணிக்கப்படும் சூரியனும் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது அதற்குரிய நாளான ஞாயிற்றுக்கிழமையன்று, அதாவது 'ஆவணி ஞாயிறில்' சூரியனை வழிபாடு செய்கிறவர்களுக்குத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் விதத்தில் தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கிறார்.



சிம்மராசியில் சூரியன் உலாவருகின்ற பொழுது ஒருவன் பிறந்தால் ஜெகத்தை ஆள்கின்ற யோகம் உண்டாகும்.செல்வ வளர்ச்சியிலும் மற்றவர்கள் வியக்கும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்படும்.சிம்மராசிக்குள் மகம், பூரம், உத்தரத்தின் முதல் பாதம் வரை அடங்கியிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர் முதல் பாராளுமன்றத் தலைவர் வரை பதவி வாய்ப்பைப் பெற்றவர்களின் ஜாதக அமைப்பைப் பார்க்கும் பொழுது பலரும் சிம்மராசியில் பிறந்தவர்களாக இருப்பதையே அனுபவத்தில் காணலாம்.

'மகம் ஜெகத்தை ஆளும்'என்றும்' பூரத்திற்கு தாரத்தால் தொல்லை உருவாகும் என்றும்,'' உத்திரத்திற்கும் புத்திரரால் தொல்லை' என்றும் சான்றோர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள். இந்த மூன்று நட்சத்திரங்களும் இணைந்திருக்கும் சிம்மராசியில் சூரியன் சஞ்சரிக்கும் ஆவணி மாதத்தில் பிறந்தவர்கள் பிரபலமானவர்களாக விளங்குவார்கள்.இவர்கள் பிடிவாதக் குணத்திற்கு சொந்தக்காரர்களாவர்.

சட்டத்தை மதிப்பவர்களாகவும்,திட்டங்கள் தீட்டுவதில் திறமைசாலிகளாகவும் இருப்பர். கொட்டமடிப்பவர்களை கொஞ்சநேரத்தில் அடிபணிய வைத்து விடுவர், பட்டம், பதவி பெறமலேயே பாரில் உள்ள அத்தனை காரியங்களையும் அறிந்துவைத்திருப்பார்கள். வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏற வேண்டும் என்ற எண்ணம் இயற்கையிலேயே இவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும். கட்டடத் தொழில் முதல் கமிஷன் தொழில் வரை எதைச் செய்தாலும் கணிசமான ஆதாயத்தைப் பெறுவர்.

கோபம் அதிகம் வந்தாலும், குணத்தில் சிறந்தவர்கள் என்ற பெயர் எடுத்திருப்பவர்கள் ஆவணிமாதத்தில் பிறந்தவர்களே. பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றுபவர்களாகவும் இவர்கள் விளங்குவர். தேசபக்தியோடு, தெய்வபக்தியும் இவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

எப்படியெல்லாம் தன்னை உயர்த்திக் கொள்ளலாம் என்ற சிந்தனையை 24மணி நேரமும் மனத்தில் நினைத்துக்கொண்டிருப்பர். தன்னுடைய கடன் சுமையைக் கவனிக்கமாட்டார்கள். ஆனால் மற்றவர்களுடைய கடன் உதவிக்கு முன்வருவர். மாற்றுக் கருத்துடையோரை மடக்குவதில்; வல்லவர்களாக விளங்கும் இவர்கள் வீட்டு அமைப்புக்களில் வாஸ்துப்படி அமைத்துக்கொண்டால் வளர்ச்சி அதிகரிக்கும் .

அரசாங்க ஆதரவு அதிகம் உண்டு என்பதால் இவர்களைச் சுற்றி இருபது பேராவது இருந்து கொண்டேயிருப்பர். ஆணையிடக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள் ஆவணிமாதத்தில் பிறந்தவர்கள் தான். ஆவணிமாதம் ரோகிணிநட்சத்திரம், அட்டமி திதியில் குழந்தை பிறந்தால் அது தாய் மாமனுக்கு ஆகாது என்ற கருத்தும் உள்ளது. மாமன், மைத்துனர்களின் முன்னேற்றங் களில் முட்டுக்கட்டைகள் ஏற்படாதிருக்கமுறையான பரிகாரங் களை உடனடியாகச் செய்து கொள்வது நல்லது என்றும் ஜோதிட சாஸ்திரங்கள் சொல்கின்றன.

குழந்தையின் ஜாதக ரீதியாக அனுகூல ஸ்தலத்தைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட நாளில் மாமனுடன் கோவிலுக்குச் சென்று சிறப்பு வழிபாடுகளைச் செய்து வந்தால் மாமாவின் வாழ்வில் மகிழ்ச்சி கூடும். அதே போல மூல நட்சத்திரத்தில் பெண் பிறந்தால் முகம் சுளிப்பர். ஆனால் ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தில் எந்தக் குழந்தை பிறந்தாலும் யோகம் தான். அது பிட்டுக்கு மண் சுமந்த பெருமானுக்குரிய நாளாகும்.

அன்றைய தினம் பிறந்தவர்களுக்கு அதிக உழைப்பு இருக்கும் கமிஷன் அடிப்படை தொழில்கள், மருத்துவம் மற்றும் மின்சாரப் பொருள் விற்பனைநிலையம், நூதனப் பொருள் சம்பந்தப்பட்ட துறை,ரியல் எஸ்டேட், ஏற்றுமதி போன்றவற்றை தேர்ந்தெடுத்து தொழில் செய்தால் பொன்னான எதிர்காலத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.அரசாங்கப் பணியில் தலைமைப் பொறுப்புகள் மற்றும் கட்டடக்கலை வல்லுநர் பதவிகளிலும் ஈடுபட்டால் பலன் கிட்டும்.

உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்,மூட்டு வலிகள், காய்ச்சல் ஏற்பட்டு அகலும். திருமண உறவில் கூட திருப்தி ஏற்பட வேண்டுமானால் பொருத்தங்களில் ஐந்து முக்கிய பொருத்தங்கள் இவர்களுக்கு அமைய வேண்டும்.புரட்டாதி, மாசி,வைகாசி , ஆனி மாதத்தில் பிறந்தவர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்றால் வளமும் நலமும் கிடைக்கும்.

ஆவணி சதுர்த்தியில் கொழுக்கட்டை நைவேத்தியம் வைத்து விநாயகப் பெருமானை வழிபடுவதோடு, ஆவணிமூலத்தில் சிவபெருமானையும், உமாதேவியையும் சிந்தையில் நினைத்து வழிபட்டால் எந்தநாளும் இனிய நாளாக மாறும்.

## மலேசியாவில் கைதான 13 இலங்கையர்கள் வார இறுதியில் விடுவிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

மலேசியாவில் கைது செய்யப்பட்டிருந்த இலங்கைச் சட்டவிரோதக் குடியேற்ற வாசிகள் 13பேர் இவ் வார இறுதியில் விடுதலை செய்யப்படுவரென அறிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்குப் படகொன்றில்சென்றுகொண்டிருந்தபோது 75 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை மலேசிய பாதுகாப்புப் பிரிவினர் கடந்த ஏப்ரல் மாதம் கைதுசெய்தனர்.

இவர்களுடன் 62பேர் கடந்த வியாழனன்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாக மலேசியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இவர்களுடன் கைது செய்யப்பட்ட ஏனைய 13பேரும் விடுதலை செய்யப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது.

இந்தவார இறுதியில் இவர்களும் விடுதலை செய்யப்படுவார்களென மலேசியாவுக்கான இலங்கைத்தூதுவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களாகிய இவர்களைப் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக மலேசிய அதிகாரிகள் விடுதலை செய்துள்ளதாக அவர் கூறினார். இவர்கள் விடுதலைசெய்யுமாறு மலேசியாவிலுள்ள சில அமைப்புகளும் ஐக்கிய நாடுகள்சபையும் அழுத்தம்கொடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா அல்லது கனடாவில் குடியேறும் எதிர்பார்ப்புடனேயே அந்த நாட்டிற்கு இவர்கள்வந்திருந்ததாக மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மலேசியாவில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் அந்த நாட்டில் அகதிகள் அந்தஸ்துடன் வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகக் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

## 40 குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன

கடந்தகால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவர்களை இழந்த பூநகரி மட்டுவில் நாடு மேற்கு, கிழக்கு ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட 40 குடும்பங்களுக்கு தலா 2 ஆடுகள் வீதம் 80 உயர் இன முசலி ஆடுகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பயனாளிகளை இரு பிரிவுகளையும் சேர்ந்த கிராம அலுவலர்கள் தெரிவு செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. (6)


## ST.JOHN' S COLLEGE,JAFFNA.
## CHUNDIKULI GIRLS' COLLEGE,JAFFNA.
### ADMISSION-2011 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

**தரம் 01 , தரம் 04 , தரம் 06, தரம்10 இற்கான அனுமதி 2011**

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2010 முதல் 15.09.2010 வரை பெற்றுக் கொள்ளலாம்.
  ஆ. எக்காரணம் கொண்டும் 15.09.2010 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
  இ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
  ஈ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2010 வியாழக்கிழமை . அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ( போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் , விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00.
05. வயதெல்லைகள்:
  அ.தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2005 க்கும் 30.01.2006 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
  ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2002 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
  இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L 2013 Batch) விண்ணப்பதாரி 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04 ,தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 09.10.2007 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

*குறிப்பு:*

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங் கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல் லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும்(A/L 2013 Batch) தமிழ்/ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை – 03.01.2011 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் – 10.01.2011 ஆரம்பமாகும். ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான ,கணித , வர்த்தக துறைகளுக்கு நடைபெறும்.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L ) (தமிழ்/ ஆங்கில மொழி மூலம் 2013 Batch) விண்ணப்பதாரிகள் (O/L) பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்கள்.**

(சி/861)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்துறை, பருத்தியடைப்பு தேவன்கணைப் பிள்ளையார் கோயில் மின்னிணைப்பு வேலைக்காக நிதி உதவி வழங்கிய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கௌரவ ***கே.என். டக்ளஸ் தேவானந்தா*** அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு கௌரவ **சில்வேஸ்திரி அலென்ரின்** (S.A. உதயன் பாராளு மன்ற உறுப்பினர்), **திரு. கந்தசாமி கமலேந்திரன்** (தோழர் கமல், யாழ். மாவட்ட இணைப்பாளர் E.P.D.P), **திரு .காந்தன்** (தோழர், தீவகப் பொறுப்பாளர்) ஆகியோரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**தேவன்கணைப் பிள்ளையார் கோயில்,**
**பருத்தியடைப்பு.**

(2185)

# வவு.புனர்வாழ்வு மையத்தில் மீண்டும் கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள புனர்வாழ்வு மையமொன்றில் மீண்டும் கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நெளுக்குளம் பிரசேத்தில் தடுத்து வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களிடமிருந்து இந்த கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை மூன்று கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

புனர்வாழ்வு மையங்களில் கையடக்கத்தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதிகிடையாது எனவும் இதனால் குறித்த தொலைபேசிகள் எவ்வாறு கொண்டு செல்லப்பட்டன என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கையடக்கத்தொலைபேசிகளுக்கு மேலதிகமாக சிம் அட்டைகள் மற்றும் சார்ஜர்களும் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறது.(6)

# பாடசாலைகளில் சீனமொழி கற்பிக்கப்பட வேண்டும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பாடசாலைகளில் சீன மொழி கற்பிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் சீன மொழி கற்பித்தல் தொடர்பான சுற்று நிருபம் விரைவில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு லும்பினி கல்லூரியில் ஏற்கனவே சீன மொழியை கற்பிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சீன அரசாங்கத்தின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் மிகவும் வலுவான மொழிகளில் ஒன்றாக சீன மொழி உருவாகும் எனவும் இதனால் சீன மொழியை பாடசாலைகளில் கற்பித்தல் அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா உலகின் மிகப் பெரிய பொருளாதாரங்களில் இரண்டாம் நிலையை விரைவில் எட்டக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (6)

# கொடுப்பதற்கு பதக்கங்கள், விருதுகள் எதுவுமே எம்மிடமில்லை -அனோமா பொன்சேகா

(கொழும்பு)

சரத்பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட பதக்கங்களையும் விருதுகளையும் அரசாங்கம் மீளப் பெற முயற்சிக்குமானால் கொடுப்பதற்கு தம்மிடம் எதுவும் இல்லையென அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எனது கணவர் ஓய்வு பெற்று நாட்கள் பல கடந்து விட்டன. இந்த பதக்கங்களும் விருதுகளும் பல காலங்களுக்கு முன்னர் கிடைத்தவை. அவை எங்கு இருக்கின்றன என்பதைக் கூட நான் அறியவில்லை. பதக்கங்களை விடுத்து இராணுவ சீருடை கூட தற்போது எம்மிடமில்லை. இல்லாத பொருட்களை அரசாங்கம் கோருமானால் அதனை எவ்வாறு வழங்குவது எனவும் அனோமா பொன்சேகா கேள்வியெழுப்பியுள்ளார்.

இராணுவ நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதலே தவறான நடவடிக்கைகளையே மேற்கொண்டுவந்தது. அந்த நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கும் என நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. பொன்சேகா மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியே நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வழக்கை முழு உலகமும் அறிந்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன் முறையீடு செய்தால் பலன் கிடைக்குமா என்றும் கூறமுடியாது.

ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளதால் மேன்முறையீடு செய்ய முடியாது என சட்டமா அதிபர் கூறுவார் எனவும் அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (6)

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)


வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான திட்டமிடல் செயல் அமர்வு என்னும் தலைப்பிலான 3 நாள் பயிற்சிப்பட்டறை ஓகஸ்ட் 19,20,21 ஆகிய தினங்களில் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றுனர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (6-4)



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விவசாயத்திணைக்களத்தினால் நவாலி அட்டகிரி பிரதேச விவசாயிகளுக்கு மானிய விலையில் தூவல் நீர்ப்பாசனப் பொறிசாதனம் வழங்கப்பட்டுள்ளது. இம்முறை மூலம் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுவதை படத்தில் காணலாம்.(படம்:-நவாலி செய்தியாளர்)

# 17.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1807 றொபர்ட் ஃபுல்ட்டனின் முதலாவது அமெரிக்க நீராவிப்படகு நியூயோர்க்கில் இருந்து புறப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்த்தக நீராவிப்படகு ஆகும்.
- 1862-லக்கோட்டா பழங்குடியினர் அமெரிக்காவின் மினசோட்டாவில் வெள்ளையினக் குடியேற்றவாதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1918-போல்ஷெவிக் புரட்சியாளர் மொயிசேய் யுரீட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டார்.
- 1939-த வைசார்ட் ஒஃப் ஒஸ் முதற்தடவையாக நியூயோர்க் நகரில் காண்பிக்கப்பட்டது.
- 1943-இரண்டாம் உலகப் போர்:ஐக்கிய அமெரிக்காவின் எட்டாவது வான் படையினர் ஜெர்மனியில் தமது 60 குண்டுவீச்சு விமானங்களை இழந்தனர்.
- 1943-இரண்டாம் உலகப் போர்: வின்ஸ்டன் சேர்ச்சில் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் கனடா பிரதமர் வில்லியம் லயன் மக்கென்சிகிங் ஆகியோர் கலந்துகொண்ட கியூபெக் மாநாடு ஆரம்பமானது.
- 1945-இந்தோனேசியா விடுதலையை அறிவித்தது.
- 1947-இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் ராட்கிலிஃப் கோடு வெளியிடப்பட்டது.
- 1958-பயனியர் 0 சந்திரனைச் சுற்ற அனுப்பப்பட்டது. புறப்பட்ட 77 செக்கன்களில் இதுஅழிந்தது.
- 1959-மொன்டானாவில் இடம்பெற்ற 7.5 அளவு நிலநடுக்கத்தினால் குவேக் ஏரி அமைக்கப்பட்டது.
- 1960-காபொன் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1962-கிழக்கில் ஜெர்மனியில் இருந்து பேர்லின் சுவரைக் கடந்து தப்பித்துச் செல்ல முயன்ற 18-வயது பேட்டர்ஃபெக்டர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சுவரைக் கடந்து செல்ல முயன்ற இறந்த முதலாவது நபர் இவராவார்.
- 1969-மிசிசிப்பியில் இடம்பெற்ற சூறாவளியில் 248 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970-வெனேரா 7 விண்கலம் ஏவப்பட்டது. வேறொரு கோளில் இருந்து (வெள்ளி) வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1979-இரண்டு சோவியத் ஏரோபுளொட் வானூர்திகள் உக்ரேன் வான் வெளியில் மோதியதில் 156 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988-பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக் மற்றும் பாகிஸ்தானின் அமெரிக்கத் தூதுவர் ஆர்னல்ட் ராஃபெல் ஆகியோர் விமான விபத்தில் கொல்லப்பட்டனர்.
- 1991-சிட்னியின் புறநகர்ப்பகுதியான ஸ்ட்ராத் ஃபீல்ட் என்னும் இடத்தில் வேட் பிராங்கம் என்பவன் சகட்டுமேனிக்கு சுட்டத்தில் 7 பேர் கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்தனர்.
- 1999- துருக்கி இஸ்மித் என்ற இடத்தில் 7.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டத்தில் 17,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1761-வில்லியம் கேரி, ஆங்கில புரட்டஸ்தாந்து மதகுரு (இ-1834)
- 1963-ஷங்கர், திரைப்பட இயக்குநர்
- 1975-பிள்ளையான், இலங்கையின் கிழக்கு மாகாண முதலமைச்சர்
- 1986-ரூடிகே, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்


### இறப்புக்கள்

- 1786-பிரஷ்டியாவின் இரண்டாம் பிரெடெரிக், பிரஷ்ய மன்னன் (பி.1712)
- 1969-லுட்விக் மீஸ் வான் டெர்றோ, ஜெர்மனியக் கட்டடக்கலைஞர் (பி.1886)
- 1988-ஸியா உல் ஹக், பாகிஸ்தான் அதிபர் (பி.1924)

### சிறப்பு நாள்

- இந்தோனேசியா சுதந்திரதினம் (1945)
- காபோன் -சுதந்திரதினம் (1960)

**1982 முதலாவது இறுவட்டு (CD) ஜெர்மனியில் வெளியிடப் பட்டது.**



# ஈழத்தவர் வரலாறு 7

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

'சிவ' என்று தொடங்கும் பெயரையும் 'சிவ' என்று முடியும் பெயரையும் கொண்ட பலர் சாசனங்களிலிடம் பெற்றுள்ளனர். இவற்றி லிருந்து இந்துமதம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட இலங்கையில் ஒரு காலப்பகுதியிலாவது நிலவியது எனத் துணியலாம்.


தொல்லியற்றிணைக்களம் தொகுத்து வரிசைப்படுத்தி வெளியிட்ட சாசனங்களில், 63 சாசனங்களில் 'சிவ' என வருகின்றது.

ஈமச்சின்னங்கள், திராவிடப் பிராமிக் கல்வெட்டுக்கள், பண்டைய வழிபாட்டு மதம் முதலான ஆய்வுகளின் விளைவாக, இலங் கைத் தீவின் ஆதிமக்கள் திராவிடர் என்பது புலனாகின்றது. ஈழத்தின் நாகரிக கர்த்தாக் கள் இந்த ஆதித் திராவிடரே என்பது தொல்லியலாய்வாளரின் முடிவாகும்.

**ஆரியர் (?) வருகை**

சிங்கள வரலாற்றாசிரியர்கள், சிங்கள மக்கள் ஆரியவம்சத்தைச் சேர்ந்தவர் என் றும் சிங்களமொழி ஆரியமொழிக் குடும்பத் தைச் சேர்ந்தது என்றும் நிறுவமுயன்றுள் ளனர். ஆனால், மகாவம்சத்திலோ, சூளவம் சத்திலோ அவற்றையொத்த வேறு நூல் களிலோ சிங்கள மக்களை ஆரிய மக்கள் என்று குறிப்பிட்டில்லை.

இந்நூல்கள் திராவிடரைத் தமிழர், பாண்டியூர், கேரளர், சோழர், கன்னடர்கள், நாயக்கர்கள் எனக்குறிப்பிட்டது போலவே, சிங்கள மக்களைச் சீகளர்கள் எனக் குறிப் பிடுகின்றன. மகாவம்சம் குறிப்பிடுகின்ற விஜயனின் கதை, பண்டுகாபயன் கதை என்ற ஐதீகக்கதைகள் மூலம் ஈழத்தின் இன்றைய நாகரிக கர்த்தாக்கள் இலங் கைக்கு வந்தனரென விபரிக்கப்படுவது,




அனுராதபுரத்தில் கிடைத்த மிகப் பழைய தமிழ்க்கல்வெட்டு பிரபல பௌத்த நிறுவனமாகிய அபயகிரி விகாரையின் சுற்றாலை திருத்தப்பட்டபோது தமிழ் பௌத்தர்கள் கற்பலகைகள் வழங்கி யதை இது கூறுகின்றது. ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டு.

இலங்கையில் நிகழ்ந்த குடியேற்றங்க ளைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஆனால், அவர்கள் ஆரியர்களென நிறுவ முயல்வது ஏற்றுகொள்ளத்தக்கதாக வில்லை. அதற்குரிய சான்றுகள் எங்கு மில்லை. பௌத்தமதத்தின் வருகை வட இந்தியாவிருந்து நிகழ்ந்ததாகையால், சிங்கள மூதாதையினரின் வருகையும் வட இந்தியப் பிரதேசங்களோடு இனங்காணப்பட்டு , அவர்கள் ஆரியரென வலிந்துரைக்கப்பட் டுள்ளன.

கி.மு. 483 ஆம் ஆண்டு நிகழ்ந்த விஜயனதும் அவனது தோழர்கள் எழுநூறு பேரினதும் இலங்கை வருகைக்கு முன்னர், உண்மையான ஆரிய சேனாதிபதிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இரா மன் என்ற ஆரியன், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட தன் மனைவி சீதையை மீட்டுச் செல்வதற்காக இலங்கைக்கு வந் தான். பாரதப் பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன், அல்லியைக் கவர்ந்து செல்வ தற்காக இலங்கையின் மேற்குக் கரையோர அரிப்புக்கு வந்தான். இயக்கப் பெண்ணான வள்ளியை மணம் முடிப்பதற்காக ஸ்கந்த என்ற ஆரியச் சேனாதிபதி, கதிர்காமம் (மாகம) வந்து சென்றான். ஆனால் இலங் கைக்கு வந்த விஜயனையும் தோழர்களை யும் ஆரியர் என பாளி நூல்கள் எதுவும் குறிப்பிடவில்லை. மெண்டிசும், பரண விதானவும் அவர்பின் வந்தவர்களும் ஆரிய ராக்க முயன்றுள்ளனர்.

விஜயனின் கதையை நிரூபிக்கக் கூடிய தொல்லியல் சான்றுகள் எதுவும் இல்லை. கிடைத்த சான்றுகள் வட இந்தியாவிலிருந்து



அனுராதபுரத்திலுள்ள பழைய இந்துக் கோயில்களின் அழிபாடுகளிடையே கிடைத்த தமிழ்க் கல்வெட்டு. ஏறத்தாழ 10 ஆம் நூற்றாண்டு

சிங்கள மக்களின் மூதாதையினர் இந் நாட்டிற்கு வரவில்லை என்பதையும் இந் நாட்டிற்கு நாகரிகத்தினை உருவாக்கியோர்

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

தென்னிந்தியாவிலிருந்து ஈழம் புகுந்தனர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளன.

(தொடரும்)

# சைவசித்தாந்த முத்தியும் சங்கர வேதாந்த முத்தியும்

## ஓர் ஒப்பீட்டாய்வு 1

**செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை**

பேராசிரியர் முனைவர்
நா.ஞானகுமாரன்
பீடாதிபதி, கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



முப்பொருள் வாதம் பேசும் சைவசித்தாந்த மும் ஒருமை வாதம்பேசும் சங் கர வேதாந்த மும் முத்தி நிலை பற்றி எடுத்தாளு கையில் ஒற்று மைப்பட்டும்வேறு பட்டும் விளங்கு வது குறிப்பிடத் தக்கதாகும். முத்தியென்பது வீடு, மோட்சம், நிர்வாணம், விடுதலை, சுதந்திரம் எனப் பொருள்படுவதாகும். சைவ சித்தாந்தத்தின், வேதாந்தத்தின் உயரிய நோக்காகவும் உன்னத இலட்சியமாகவும் முத்தியானது அமைகின்றது. சைவசித்தாந்தத்தில் மூன்று பொருட்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றிற் கிடையில் தர்க்க ரீதியான உறவு நிலையி னடிப்படையில் பசுவானது பாச நீக்கத்தின் அடிப்படையில் முத்தியடைவது பொதுவில் எடுத்தாளப்படுகின்றது. சங்கர வேதாந்தத்தி லும் ஒருமைத்துவமான பிரம்மஞானத் தினைக் கைவரப் பெறுவதானது அதாவது அஞ்ஞானம் அகன்று அறிவே மயமான பிரம்மஞானத்தை உணர்வது முத்தி நிலையை அடைவதாகின்றது. இங்கு சைவ சித்தாந்தமும் வேதாந்தமும் அழுக்கான தாகக் கருதப்பெறும் பாச, பந்த நீக்கத்தினால் அல்லது அஞ்ஞான நீக்கத்தினால் முத்திய டையப் பெறலாம் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றன.

முத்தி என்பது பந்தம், கட்டு, மலம், பாசம் எனச் சுட்டப்படும் அஞ்ஞான நிலையிலி ருந்து விடுபடுதலைக் குறித்து நிற்கின்றது. சைவசித்தாந்தத்தின்படி ஒவ்வொரு ஆன் மாக்களும் மும்மலங்களின் பந்தங்களுக் குட்பட்டிருப்பது அறிதற்குரியதாகும். ஆண வம், கன்மம், மாயை ஆகிய பாசப் பிணிகளா னவை தம் தம் சக்திக்கேற்ப எமதறிவை மயக்கி உலகப் பந்தங்களுக்குள் பிணிப்ப தாக அமைகின்றது.

இத் தன்மைக்கமையவே ஆன்மாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர் என அமையப்பெற சகல நிலை, கேவல நிலை, சுத்தநிலைக்கு உரியவர்களுக்கெனவும் வகுக்கப்படுகின்றனர். ஆணவம் தன்னை மறைத்து தன்னுணர்வை மறைத்து, அகங் காரம், மமதை என்னும் குணவியல்புகளை வளர்த்து நிற்கின்றது. வல்லின கன்மம் மயக்கும் மாயையைப் போல ஆணவமும் எமது அறிவை மழுங்கடித்து சுயரூபத்தை யும், உண்மையையும் உணரவொட்டாது செய்கிறது.

ஒளி எழுகின்ற வேளை எவ்வாறு இருள் அடங்கி ஒளி சுயப்பிரகாசமாய்த் தோற் றுகின்றதோ அதேபோல ஆணவம் வலி குன்றும் போது இறையருள் பரவுமென்பது சைவசித்தாந்தத்தின் முத்திக் கோட்பாடு உள்ளீடாய் விளங்கும் உண்மையாகும். இம் மலபந்தத்தினின்று விடுபட்டு ஆன்மா தன் சுயரூபத்தை உணர்ந்து உயரிய நிலையடை வதே முத்தியாகின்றது.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வழிபட்டு முத்திப்பேறு பெறும் பொருட்டேயாகும் என்பார் ஆறுமுகநாவலர். சைவசித்தாந்தங்களின்படி முப்பத்தாறு தத்துவங்களையும்கடந்து அப்பாற்பட்டு விளங்கும் சிவனின் திருவடிகளை அடை வதே இலக்கு ஆகின்றது. அருணந்தி சிவாச் சாரியார், 'சிவனடியைச் சேருமுத்தி செப்பு வதிங் கியாமே' எனக் குறிப்பிடுதல் காண லாம். இக் கருத்தின் சாயலையே சிவாக்கிரக யோகிகள்,

*'அறைந்தனமுன் னேசைவசித்தாந்த முத்தி யான்மாவின் சிற்சத்தி யனாதியாண வத்தால்*

*மறைந்ததுதான் பருவத்தே சிவனருளி ளாலே மாசற்று நின்றநிலை யேசிவத்தை மன்னி*

*உறைந்துவே றறவுப்பு நீருடனே நன்னீ ருற்றதுபோ லொருணர்வா யுவமை யின்றி*

*நிறைந்து பர மானந்த மெய்தியது தானு நிகழாம லதுதானாய் நிற்றலென நேரே'*

என எடுத்தாளுதல் காணலாம். இரு வினையொப்பும், மலபரிபாகமும் ஆன்மாக் களுக்கு சிவஞானத்தினால் வந்துற்ற வேளையில் மலத்தடைகள் நீங்கி, உப்பு நீருடன் நன்னீர் கலந்து இரண்டற்ற தன்மை யில் பேரானந்தத்தை அடையப் பெறும். அந் நிலையில் பரிபூரணனான சிவனைப் பொருந்துதல் மாத்திரமன்றி அந்தச் சிவமா கவே நிற்பது சைவசித்தாந்த முத்திக்குரிய தாகுமென விளக்கமாக விபரித்துள் ளார்.

வேதாந்தம் 'பிரம்மம் சத்தியம்' என எடுத்தாள்வதுடன் ஒப்பீட்டுக்கப்பாற்பட்ட முழுமையான உண்மையே பிரம்மம் என வும் அதுவே அடைதற்குரிய இலக்கென எடுத்தாளும். பிரம்மத்தை உணர்தல் பிரம்ம மவாதற்குரியதெனச் சங்கரர் விளக்கி நிற்பார்.

அஞ்ஞானமான மாயையின் இணைவினால் ஆன்மாக்கள் உண்மையை உணராது விளங்கும் அஞ்ஞானம் அகன்ற நிலை யில் ஞானமயமான பிரம்மமாகி நிற்கும் இதுவே வேதாந்த முத்தியாகும்.

சைவசித்தாந்தங்களின் படி அநாதியான ஆன்மா, சதசத் எனும் வகையில் சத்தோடும் அசத்தோடும் இணையவல்லதாகும்.


இந்த வகையில் சார்ந்ததன் வண்ண மானது சத்தைப் போல தூய இயல்பினனா யினும் ஆன்மா மலத்தைச் சாருகின்ற தன்மை யினால் கட்டுண்டு கீழ் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறது. மலங்களின் பிணிப்பினால் ஆன்மா தன்னறிவும் சிவனறிவும் மழுங்கடிக் கப்பட்டிருப்பதாக எடுத்தாளுவர். மல நீக்க வழி ஆன்மா சிவனைச் சாரு கிறது. மலத்தைச் சாருகின்ற தன்மைக்குக் கன்மம் அடிப்படை யானதாக அமைகின்றது. கன்ம மெனும் போது நல்வினை, தீவினை எனும் இரு நிலைகளும் உட்படும்.

(தொடரும்)

# அவுஸ்திரேலிய தேர்தலில் முதல் தமிழ்ப் பெண்

எட்டு வயதுக் குழந்தையாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்த பிராமி ஜெகனுக்கு இப்போது 30 வயது! இதில் ஆச்சர்யக் குறிக்கு என்ன வேலை என்கிறீர்களா? இந்தப் பெண்மணி இன்று அவுஸ்திரேலிய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், மேலவைக்கு (செனட்) போட்டியிடுகிறார்!

பொதுவாக, புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா வரும் தமிழர்கள், அரசியல் அமைப்புகளில் அதிகம் பங்கேற்பதில்லை. பொது



பாப் பிரவுன்

அமைப்புகளில் பணியாற்ற விரும்பினால், தமிழ்ச் சங்கங்கள் அமைப்பார்கள்... கோயில் கட்டுவார்கள் அவ்வளவுதான். ஆனால், தமிழ்ப் பெண் ஒருவர், வெள்ளைக்காரர்கள் மட்டுமே போட்டியிடும் பொதுத் தேர்தலில், அவர்களுக்கு சமமாக அரசியல் களம் காண்பது ஆச்சர்யம்தானே!

"கிரீன்ஸ்கட்சி"யின் சார்பாகப் போட்டியிடும் பிராமி ஜெகனின் தந்தை அருணாசலம் ஜெகன், சிவில் இன்ஜினியர். அம்மா கிருஷ்ணா, ஆசிரியை. 1988ஆம் ஆண்டு குடும்பத்துடன் அவுஸ்திரேலியா வந்தவர்கள். சிட்னியில் உள்ள நியூசௌத்வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் "இன்ஃபர்மேஷன் சிஸ்டம்ஸ்" பட்டப் படிப்பை முடித்து, மிகப் பெரிய முதலீட்டு வங்கிகளில் ஒன்றான "மெக்குவாரி வங்கி"யில் பணியில் சேர்ந்தார் பிராமி ஜெகன். பின்னர், உலகின் மிகப் பெரிய முதலீட்டு வங்கிகளில் ஒன்றான ஜே.பி.மார்கனில், அவுஸ்திரேலியாவிலும் மற்றும் 2002ஆம் ஆண்டு முதல் லண்டனிலும் பணியாற்றினார். லண்டனில் இருந்தபோது இதழியல் துறையில் ஆர்வம் ஏற்பட்டு, "லண்டன் ஸ்கூல் ஆஃப் ஜர்னலிச"த்தில் இதழியல் பட்டம் பெற்றார். மீண்டும் அவுஸ்திரேலியா திரும்பி, வங்கி வேலையை விட்டுவிட்டு எஸ்.பி.எஸ் தொலைக்காட்சியில் பணியாற்றியவர், தற்போது "அஃபிடா" என்ற தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நிறுவனத்தில் தகவல் தொடர்புத்துறை அதிகாரி!


"நான் இலங்கையில் பிறந்தாலும், 2002 வரை... அதாவது எனக்கு 22 வயது ஆகும் வரை இலங்கைக்குச் செல்லவில்லை. எனக்கு விபரம் தெரியத் தொடங்கிய நாளில் இருந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவருவதால், "இயல்பாகவே வாழ்க்கை என்பது சுதந்திரமான, வசதியான, மேற்கத்திய நாடுகளின் வாழ்க்கைத் தரம்தான்" என நினைத்து இருந்தேன். இலங்கையின் நிகழ்வுகளைச் செய்திகளாகப் படித்திருந்தாலும், போரின் கோரத் தாண்டவத்தை நேரில் சென்று பார்த்தபோது நிலைகுலைந்து போனேன். அதன் தாக்கத்தால் தான், உலகில் தங்கள் வாழ்க்கையில் கொடுமைகளைத் தவிர வேறு எதையுமே சந்தித்திராத இலங்கைத் தமிழர் உள்ளிட்ட மக்களுக்கு ஏதேனும் செய்ய

## இலங்கையில் பிறந்த இவர் தேர்தலில் வெற்றிபெற்றால்...

வேண்டும் என்பதற்காகவே இதழியல் படித்தேன்".

கேள்வி:-"அவுஸ்திரேலிய அரசியலில் ஏன் "கிரீன்ஸ் கட்சியைத் தேர்ந்தெடுத்தீர்கள்?"

பதில்:-"அவுஸ்திரேலியாவில் பிரதான கட்சிகள் இரண்டு மட்டுமே. ஒன்று, தற்போது ஆளும் தொழிலாளர் கட்சி. இரண்டாவது, எதிர்க்கட்சியான லிபரல் கட்சி. இவ்விரு கட்சிகளுக்கு அடுத்த கட்சியாகவும், சராசரியாக 12 முதல் 16 சதவிகிதம் வரை வாக்கு வங்கியைக்கொண்டதாகவும் உள்ள கிரீன்ஸ்கட்சி, அவுஸ்திரேலியாவின் மூன்றாவது பெரிய கட்சி."நேர்மை,மனித நேயம், சுற்றுச் சூழல், வறியவர்களைச் சுரண்டுதலை எதிர்த்தல், எல்லார்க்கும் எல்லாமும்" போன்ற கொள்கைகளைத் தன்



பிராமி ஜெகன்

உயிர்நாடியாகக் கொண்ட கட்சி. இதன் தலைவர், செனட்டர் பாப் பிரவுன். முன்னாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அவுஸ்திரேலிய நாடாளுமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியபோது, அமெரிக்காவின் போரில் அநியாயமாகக் கொன்று ஒழிக்கப்பட்ட அப்பாவி ஈராக்கியர்களுக்கு ஆதரவாக ஜார்ஜ் புஷ்ஷை எதிர்த்து முழங்கியவர் பாப். அதனால், அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர். இப்படி எதிர்த்துப் போராடும் குணமும், கொள்கைப் பிடிப்பும்கொண்ட கட்சியாக கிரீன்ஸ்கட்சி இருப்பதால் தான் அதில் சேர்ந்தேன்."

கேள்வி:-"இலங்கைத் தமிழருக்கு உங்கள் கட்சியால் உதவ முடியுமா?"

பதில்:-"கிரீன்ஸ் கட்சி மட்டுமே, ஆதிக்கப் போர்களினாலும், இன

ஜூனியர்விகடன்

ஒடுக்குமுறைப் போர்களினாலும் பாதிக்கப்பட்ட உலக மக்கள் அனைவருக்கும் அவுஸ்திரேலியா வில் ஆதரவு வழங்குகிறது. இலங்கை இனப் போரில் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களையும் ஆதரிக்கிறது. அவுஸ்திரேலியாவும், ஏனைய உலக நாடுகளும், ஐ.நா. உள்ளிட்ட உலக அமைப்புகளும் ஒன்றிணைந்து இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கவும், அங்கு நடைபெற்றுள்ள போர்க் குற்றங்களை விசாரித்து, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்த்தவும், கிரீன்ஸ் கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது."

கேள்வி:-"தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு என்ன சொல்கிறீர்கள்?"

பதில்:-"தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் என்னைவிட வயதிலும், அனுபவத்திலும், அறிவிலும் மூத்தவர்கள். "அச்சம் தவிர்ந்தது வாழ்வு... நல்லன்பில் விளைவது வாழ்வு"என்று பாரதிதாசன் பாடிய வாழ்க்கை, எமது தமிழ் மக்களுக்குக் கிடைப்பதற்கு அருள் கூர்ந்து உதவுங்கள் என சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

கேள்வி:-"திருமணம்...?"

பதில்:-எனக்கும் திருமணம் நடக்கும் என்று நம்புகிறேன். ஆனால், திருமணம் செய்யாமல் ஒரு தமிழ்ப் பெண் வாழ முடியாது என்ற கருத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை!" □

# ஆவணி மாத இராசி பலன்கள்

## மிதுனம்

மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள் வரை

**மற்றவர்களின் மனம் நோகாமல் பேசக் கூடிய ஆற்றல் பெற்ற மிதுன இராசி நேயர் களே!**

குழந்தை மனம் பெற்றவர்கள் நீங்கள். கொடுக்கல் - வாங்கல்களில் பலரால் ஏமாற் றப்படுபவர்களும் நீங்கள் தான். மனதில் சரி என்று தோன்றுவதை நீங்கள் உடனடியாகச் சொல்லி விடுவதால் தான், நண்பர்கள் திடீர் திடீரென எதிரிகளாக மாறுகிறார்கள். பங்கா ளிப் பகை உங்களுக்கு அதிகமாகவே இருக் கும். ஒரு காலத்தில் பாசத்தின் பிடியில் சிக்கி யிருப்பீர்கள். மற்றொரு காலத்தில் பகைக்கு மத்தியில் வாழ்க்கை நடத்துவீர்கள்.

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய் ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்தில் உங்கள் ராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிப்பதோடு, சுக ஸ்தானத்தில் செவ்வாய், சனி, சுக்ரன் மூவரும் கூடியிருக்கிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல. எதிர்பாராத திருப்பங்கள் பலவும் நடைபெறும். இயல்பான வாழ்க்கையில் இடை யூறுகள் வரும் சூழ்நிலை இருப்பதால், அதற் கேற்ற விதத்தில் சுய ஜாதக அடிப்படையில் வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப் பதோடு, ரிசிநாதன் புதனும் வக்ர இயக்கத் தில் இருக்கிறார். ராசிநாதன் வக்கிரமாக இருக் கும் பொழுது, எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது. குறிப் பாக, கேந்தி ராதிபத்ய கிரகம் என்பதால், அதன் வக்ரகாலத்தில் வரவு அதிகரிக்கும் என்றாலும், செலவு இருமடங்காகும். மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு தரும் சம்ப வங்கள் நடைபெறலாம். வாகன திருத்தச் செலவுகள் அதிகரிக்கும். ஆகாரத்தில் கட்டுப் பாடு செலுத்தி ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். நீண்டநாளாக விலை போகாத சொத்துக்கள் இப்பொழுது விற்பனையாகும்.

இம்மாதம் 31ஆம் திகதி துலாம் இராசி யில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, புத்திர வழியில் ஏற்பட்ட கலக்கங் கள் அகலும். அவர்களால், மேலதிக வருமா னங்கள் வந்து சேரும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் ஒரு சிலருக்கு கிடைக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை கள் கிடைத்து தொழிலை விரிவு செய்ய முன் வருவீர்கள். ஆனால், பங்குதாரர்களின் ஒத்துழைப்புக் குறையலாம்.

செப்ரெம்பர் முதலாம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரித்து புத - ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால், மூத்த சகோதரத்தால் ஏற் பட்ட பிரச்சினைகள் அகலும். மூதாதையர் களின் சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். வழக்குகளில், திசை திருப்பம் ஏற்படும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி துலாம் ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகி றார். பதினொன்றுக்கு அதிபதி ஐந்தில் சஞ்ச ரிக்கும் பொழுது, பணப்பற்றாக்குறை அகலும். பலன் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று நினைத்து செய்த காரியத்தில் பலன் கிடைக் கும். பழைய வீட்டைக் கொடுத்துவிட்டு புதிய வீடு வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

அர்த்தாஷ்டமச் சனியின் பிடியிலிருந்து விடுபடவும், அன்றாட வாழ்கை நன்றாக அமையவும் சனிக்கிழமை தோறும் ஆஞ்ச நேயரை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மாதத் தொடக்கத்தில் செவ்வாய், சனி, சுக்ரன் கூடியிருப்பதால், மருத்துவச் செலவு அதிகரிக்கலாம். வீண் விரயங்கள் அதிகரிக் கும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படும். மனதிற்கு பிடித்தவரோடு வரும் சச்சரவுகளை மதியூகத்தால் தவிர்த்து கொள்வது நல்லது. அண்டை, அயலார் களை அனுசரித்து சென்றால் சண்டை சச்சரவுகளி லிருந்து மீளலாம். தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடு தித்திக்கும் வாழ்க்கையை அமைத் துக் கொடுக்கும்.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

**கொள்கைப் பிடிப்போடு செயல்பட்டு கோலாகலமாக வாழ்க்கை நடத்தும் கடக ராசி நேயர்களே!**

நீங்கள் பொது நலத்திற்கென்றே பிறந் தவர்கள். புதிய மனிதர்களைக் கண்டால், உங்களை அறிமுகப்படுத்த தேவையில்லை. நீங்களே அறிமுகம் செய்து கொண்டு ஐந்து நிமிடத்திற்குள் நண்பர்களாகி விடுவீர்கள். சுறுசுறுப்புக்கு எடுத்துக்காட்டு நீங்கள்தான். விவேகத்தோடு இணைந்த வேகம் தான் உங்கள் வெற்றிக்கு காரணம்.

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய் ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் சந்திரன் நீச்சம் பெற்று, வக்ர குருவால் பார்க் கப்படுகிறார். எனவே, பணவரவு திருப்திகர மாக இருக்கும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். இருக்குமிடத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். சகோதர ஸ்தானத் தில் செவ்வாய், சனி சேர்க்கை பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகள் வழியே ஒரு தொகை செலவாகலாம். அவர் கள் உடல்நலம் குறைவாகி மருத்துவச் செலவு களை நீங்கள் மேற்கொள்ளலாம். குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் குறைகள் அகலும்.

3, 12க்கு அதிபதியான புதன் இம் மாதம் 22ஆம் திகதி கடக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, வரவைக் காட்டிலும் செலவுகூடும். அதுவும், வக்ர கதியில் புதன் வருவதால், எதிர் பாராத விதத்தில் திடீர் விரயங்களும் உருவா கலாம். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்ய இயலாது. பயணங்கள் அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். தொழிலில் பங்குதாரர்களை மாற்றும் சூழ் நிலை உருவாகும். மாமன், மைத்துனர் வழியில் அனுசரித்துச் செல்வது நல்லது.

இம்மாதம் 31ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழியில் பகை உரு வாகும். பெண்வழி பிரச்சினைகள் அதிகரிக் கும். மண், பூமி சம்பந்தப்பட்ட வகையில் ஏற் பட்ட பிரச்சினைகளை விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. செப்ரெம்பர் முதல் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிப்பது ஓரளவு யோகத் தைக் கொடுக்கும். வழக்குகளில் வெற்றி கிட்டும், வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த சம்பள உயர்வு, பதவி உயர்வுகள் இனி வந்து சேருவதற்கான அறிகுறி தோன்றும்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார் பாக்யாதிபதி மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் துலாம் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, தொட்டகாரியங்கள் வெற்றி பெறும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி கைகூடும். பிரபலங் களின் பின்னணியால் நல்ல காரியமொன் றிற்கு பிள்ளையார் சுழிபோடுவீர்கள். பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை அமையும்.

### சிவல்புரி சிங்காரம்

பார்க்கும் குருவை பலப்படுத்தினால், பணத்தின் வரவும் அதிகரிக்கும். மனத்தில் தெளிவும், தைரியமும் பிறக்கும். எனவே, தட்சணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கல்யாண பேச்சு வார்த்தைகள் கைகூடும் என்றாலும், குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். கணவன், மனை விக்குள் அனுசரிப்பு குறையும். குழந்தைகள் நலன் கருதி ஒரு தொகை ஒன்றைச் செலவிடுவீர்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்துசேரும். சர்ப்ப சாந்தி செய்தால் சந்தோஷம் கிடைக்கும். (தொடரும்)

# சொந்தக் கிராமங்களுக்கு செல்லமுடியாத நிலையில் மயில்வாகனபுரம், குமாரசாமிபுரம் கிராம மக்கள்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் கிழக்கு எல்லைப்புறத்தில் உள்ள மயில்வாகனபுரம், குமாரசாமிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இருநூறுக் கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்கள் நீண்ட நாட்களாக மீள்குடியேற்றம் செய்யப் படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இருந்து மீள்குடியேற்றத்திற்காக அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு இந்தக் குடும்பங் களை அதிகாரிகள் அழைத்துச் சென்றுள்ள போதிலும், அவர்கள் தமது சொந்தக் காணி களுக்குப் போக முடியாத நிலையில் இருப்ப தாக கவலை தெரிவிக்கின்றார்கள்.

மீள்குடியேற்றம் செய்யப்படுவதாகத் தெரிவித்து அழைத்துச் சென்ற போதிலும் தாங்கள் சொந்தக் காணிகளில் குடியமர அனுமதிக்கப்படாதிருப்பதனால் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

தாமதமடைந்துள்ள தமது மீள்குடி யேற்றம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமது பிரதேசத்திற்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமாகிய நாமல் ராஜபக்ஷவின் கவனத்திற்கும் தாங்கள் கொண்டு வந்திருப்பதாக அவர்கள் தெரி வித்துள்ளனர். (6)

# பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையினால் ஒரு வருடத்தில் 146 வழக்குகள் விசாரணை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக மத்தி யஸ்தர் சபையினால் ஒரு வருட காலப் பகுதியில் 146 வழக்குகள் விசாரணை செய் யப்பட்டுள்ளது.

இதில் 48 வழக்குகளுக்கு தீர்வு காணப் பட்டுள்ளது.

மேலும் இவற்றில் அதிகமான வழக்கு கள் அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்தென வும் இவ் வழக்குகளில் 90 வீதமானவை காணிப்பிரச்சினை, எல்லைப் பிரச்சி னை தொடர்பானது என்றும் மத்தியஸ்தர் சபை தவிசாளர் வடிவேலு தெரிவித்துள் ளார். (6-10)

# வைத்தியசாலைகளின் பயன்பாடு கருதி 100 அம்புலன்ஸ்கள் கொள்வனவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளின் பயன்பாடு கருதி 100 அம்புலன்களைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சு திட்ட மிட்டுள்ளது.

வைத்தியசாலைகளைப் பொறுத்தவரை, அம்புலன்ஸ்கள் அவசியம் தேவைப்படுவன.

எனவே அவற்றைக்கொள்வனவு செய்ய அமைச்சு திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமை ச்சர் மைத்திரிபால சிறிசேன தெராரிவித் துள்ளார்.

ஒரு அம்புலன்ஸுக்கு 65 இலட்சம் ரூபா வரை செலவாவதாகவும் இதற்காக மொத்தம் 65 கோடி ரூபாவை ஒதுக்கத் திட்டமிட்டுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை, முள்ளானை கூத்துமாலை யோடை ஸ்ரீ பாலவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ளதென ஆலய நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (6)

# ஆதிவாசிகளின் கலாசாரங்களை பாதுகாப்பதற்கு புதிய நிறுவகம்

(கொழும்பு)

ஆதிவாசிகளின் கலாசார விழுமியங் களை பேணிப் பாதுகாக்கும் நோக்கில் புதிய நிறுவகமொன்று உருவாக்கப்பட உள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

நாவீன்ன பண்டாரநாயக்க ஆராய்ச்சி மையத்தினால் இந்த நிறுவகம் ஆரம் பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படு கிறது.

உணவுப் பழக்கவழக்கம், நோய்த் தடுப்பு முறைமை, மந்திரங்கள், நடன மற்றும் கலாசார பாரம்பரியங்கள் போன்ற ஆதி வாசிகளின் கலாசார விழுமியங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரி விக்கப்படுகிறது.

தம்பான, வாகரை, ஹென்னாநிகால மற்றும் பொல்பெத்த ஆகிய பிரதேசங்களில் வாழும் ஆதிவாசிகளிடம் இதற்கான தரவுகள் திரட்டப்படவுள்ளது.

அத்துடன் ஆதிவாசிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு அளிக் கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

1931 - 1947ஆம் ஆண்டுகள் வரை நீண்ட காலம் கல்விக் குழுவின் தலைவராக இருந்து சேவை செய்த காரணத்தால் இக்காலம் கன்னங்கரா யுகம் என அழைக்கப்படுகின்றது. இக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையே விசேட குழுவின் அறிக்கை என்று குறிப்பிடப்படுகின்றது. இவ் அறிக்கை கல்வி வளர்ச்சியில் முக்கியமான பங்களிப்பினைச் செய்துள்ளது. அத்துடன் அந்தஸ்து வேறுபாடுகளின்றி எல்லா மக்களும் கல்வியில் முன்னேற்றம் பெறுவதற்கும், நாட்டின் தேசிய நலன்களுக்கு உதவுவதற்கும், நாட்டின் விவகாரங்களில் மக்கள் தீர்ப்பு கூறுவதற்கும், வாக்குரிமையைச் சீராகப் பயன்படுத்துவதற்கும் மக்களுக்கு உதவும் வகையில் கல்வி அமைய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. நமக்குச் சுதந்திரம்வரும் முன் 1945ஆம் ஆண்டிலே இப்பொழுதுள்ள கல்வி முறைக்கு மூலைக் கல் நாட்டப்பட்டது. அந்த ஆண்டிலே கல்விச் சிறப்புக்குழு செய்த விதப்புரையோடு, இந் நாட்டில் யாவருக்கும் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை முதன் முதலாக நடைமுறைக்கு வந்தது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் இலவசக் கல்வியின் அறிமுகம் ஒரு மைல்கல் என வர்ணிக்கப்படுகின்றது. 1943ஆம் ஆண்டில் கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா தலைமையிலான விசேட கல்வி ஆணைக் குழு பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் கல்வியை இலவசமாக வழங்க வேண்டுமென விதந்துரைத்தது. எனவே குறிப்பிட்ட காலப் பகுதியில் அரசாங்கம், மதக் குழுக்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே கல்வியை வழங்குவதில் நிலவிய வேறுபாடுகளை நீக்குவதற்குச் சிறந்த வழிமுறையாக இலவசக் கல்வி விளங்கும் எனக் கருதப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பொருளாதார சமூக வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கல்வி பெறத்தக்கவர்களென்றும் கொள்கையை மாற்றியமைத்து ஒவ்வொரு தனிநபரும் தனது அறிவு ஆற்றலை வளர்த்து, நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெறும் வகையில் அமைந்தது. மாணவரிடம் கட்டணம் வசூலிப்பதனால் சமூகத்தில் வர்க்க வேறுபாடும், பாடசாலைகளுக்கிடையே கல்விச் சமத்துவமின்மையும் காணப்பட்டது.

இதனால் எந்த ஒரு கட்டத்திலும் பாடசாலை அனுமதிக்கு கட்டணம் அறவிட முடியாதென்று தேவையானால் தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றுக்கு மாத்திரம் பணம் வசூலிக்கப்படலாம். என்றும் தெரிவிக்கப்பட்டது. சமுதாயத்தில் சமூக நீதி, சமத்துவம் என்பவை மறுக் கப்படும் நிலையில் இருந்தன. இவற்றை இல்லாமல் செய்யும் நோக்கத்தோடு இலவசக் கல்வி வழங்கப்படவேண்டும் எனக்கூறப்பட்டது. எனவே கல்வி வளர்ச்சியினைப் பார்க்கும் போது அவ்வளர்ச்சி ஆட்சியாளர்களுடைய நோக்கங்கள், கொள்கைகள் என்பவற்றின் பின்னணியிலே இடம் பெற்றிருக்கின்றது. ஆரம்ப காலப் பகுதியில் மதமாற்றமே முக்கிய நோக்கமாக அமைந்ததுடன் கல்வி அதற்கான கருவியாகத்தான் பயன்பட்டதையும் அறிய முடிகின்றது. அதன் பின் ஆங்கிலக் கல்வி போதனாமொழியாக இருந்தமையும், கல்வி மொழியை அடிப்படையாகக் கொண்டு கட்டணம் விதிக்கப்பட்டமையும் ஆங்கில சுயமொழிக் கல்வி ஏற்பாடுகளில் இரட்டைத் தன்மை உருவாவதற்கு ஏதுவாக இருந்தன. இருவகைப் பாடசாலை முறை கல்வித் துறையில் நிலவிய சமவாய்ப்பின்மையைப் பிரதிபலித்தது என்பதையும் குழு சுட்டிக்காட்டியது. எனவே 1945ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் இலவசக் கல்வி அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அன்று தொடக்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் பாடசாலைக் கட்டணம் அறவிடாது கல்வியை வழங்கின.

ஆனால் பெரும்பாலான உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் இம் முறையை ஏற்றுக்கொண்டதுடன் சில பாடசாலைகள் அனுமதி பெற்று 1948ஆம் ஆண்டிலும் வேறு சில பாடசாலைகள் 1951 ஆம் ஆண்டிலும் வெவ்வேறு படிமுறை முன்னேற்றங்களுடன் இம்முறை நடைமுறைக்கு வரலாயிற்று. அதே சமயம் சில பாடசாலைகள் இத் திட்டத்தில் இருந்து விலகி செயற்படுவதற்கு அனுமதி அளிக்க வேண்டியும் இருந்தது. இந்த அடிப்படையில் இலவசக் கல்வி வழங்கும் நிறுவனங்களுக்கு மாத்திரம் அரச உதவி வழங்கப்படுமென்றும், அவற்றை மறுக்கும் நிறுவனங்களுக்குஅரச உதவி இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அக்காலம் தொடக்கம் இலவசக் கல்வி இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கான அடித்தளத்தை இட்டது எனலாம்.

எனவே நாட்டில் இலவசக்கல்வி முறையை அமுல்படுத்தியதன் மூலம் ஏழ்மையான பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதில் இருந்த பொருளாதாரத்தடைகள் ஓரளவுக்கு நீக்கப்பட்டன. இதன் காரணமாக ஆங்கிலப் பாடசாலைகளில் கல்வி பயிலும் வாய்ப்பை நாடும் பிள்ளைகளின் எண்ணிக்கை பெருகியது.

எனவே1945ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கப் பாடசாலைகளின் தொகை 15

1944-1960 ஆண்டு வரையான ஆங்கில மொழிக்கல்வி,சுயமொழிக் கல்வியின் பரம்பல்

| ஆண்டு | ஆங்கிலப் பாடசாலைகள் | ஆங்கிலப் பாடசாலை மாணவர் தொகை | இருமொழிப் பாடசாலைகள் | இருமொழிப் பாடசாலை மாணவர் வரவு | சுயமொழிப் பாடசாலைகள் | சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை | தோட்டப் பாடசாலைகள் | தோட்டப் பாடசாலை மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1944 | 354 | 101029 | 62 | 15194 | 4146 | 667032 | 918 | 43896 |
| 1946 | 365 | 116385 | 43 | 13505 | 4441 | 752282 | 850 | 35886 |
| 1948 | 623 | 229064 | | | 4645 | 900907 | 968 | 51451 |
| 1950 | 647 | 259356 | | | 4681 | 1033837 | 945 | 59475 |
| 1952 | 659 | 287646 | | | 4843 | 1136110 | 934 | 66089 |
| 1954 | 670 | 312543 | | | 5072 | 1218956 | 890 | 66280 |
| 1956 | 679 | 324739 | | | 5303 | 1302834 | 884 | 69918 |
| 1958 | 754 | 413278 | | | 5798 | 1476617 | 879 | |
| 1960 | 779 | 500506 | | | 6207 | 1613140 | 874 | |

ஆக விருந்து 1950ஆம் ஆண்டில் 289 ஆக அதிகரித்தது. 1945ஆம் ஆண்டில் 5-14 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளில் 50 வீதமானவர்கள் ஆங்கிலக் கல்வியையும், சுயமொழி கல்வியையும் கற்றனர். 1949ஆம் ஆண்டு இவ் வீதம் 63ஆக அதிகரித்தது. இலவசக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தியதன் விளைவாகப் பொருளாதார வசதியுள்ளவர்களுக்குத்தான் பயனுள்ள ஆங்கிலக் கல்வி கிடைக்கும் என்ற நிலையில் இருந்து மாற்றம் ஏற்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

எனினும் ஆங்கில மொழி கற்றவர்கள், சுயமொழி கற்றவர்கள் என்ற இரு வகுப்பினரின் தொகை மேலும் அதிகரிப்பதில் மாற்றம் நிகழவில்லை. ஆங்கில மொழிக்கல்வியை வருமானம் குறைந்தவர்களுக்கு விரிவு செய்யும் உற்சாகத்திற்கு சமூக அமைப்பில் புதிய சமூகப் பிரிவுகள் வளர்ச்சியுறுவதைத் தடுக்கும் முயற்சி தளர்ச்சியடைந்தது. பின் வரும் புள்ளிவிபரம் மூலம் 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழிக் கல்வியும் சுயமொழிக் கல்வியும் விரிவடைந்ததைக் காட்டும்.

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

மேற்கூறப்பட்ட அட்டவணை மூலமாக 1948ஆம் ஆண்டில் மாணவர்களின் தொகை 1946ஆம் ஆண்டைவிட 112679 ஆல் அதிகரித்தது. இம் மாற்றம் இலவச கல்வி முறையால் ஆங்கில மொழி மூலமான கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் விரிவடைந்தமையைக்புள்ளிவிபரங்கள்காட்டுகின்றன. (தொடரும்)

3

## போதியளவு பணமிருந்தால் அரசு ஏன் கடன் வாங்க வேண்டும்

### ரவி கருணாநாயக்க எம்.பி.கேள்வி

(கொழும்பு)

போதியளவு நிதி ஒதுக்கீடுகள் காணப்பட்டால் ஏன் அரசாங்கம் கடன் வாங்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசி அபிவிருத்தி வங்கியிடம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் கடனாக பெற்றுக்கொள்ள முயற்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட அவர்,

குமரன் பத்மநாதனின் சொத்துக்களை அரசுடைமையாக்கி அதனை ஏன் நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்த முடியாது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை குமரன் பத்மநாதனிடம் 20 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துக்கள் காணப்படுவதாக அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்ததாகவும் 6.5 பில்லியன் வெளிநாட்டு ஒதுக்கங்கள் காணப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் அரசாங்கம் ஏன் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (6)

## 30 சமாதான நீதவான்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

மோசடியான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்ட 30 சமாதான நீதவான்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஊழல் மோசடிகளை மேற்கொண்ட காரணத்தினால் குறித்த சமாதான நீதவான்கள் பதவிகளை இழந்துள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் தெரிவித்துள்ளார்.

ஆவணங்களில் கையொப்பம் இடுவதற்காக சிலர் பணத்தை அறவீடு செய்துள்ளதாகவும் போலியான ஆவணங்களை சிலர் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

நாடு முழுவதிலும் இவ்வாறு சமாதான நீதவான்கள் கடமை தவறிச் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (6)

## இலங்கை- இந்திய மக்களுக்கிடையில் கூடுதலான தொடர்புகள் பேணப்பட வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகர் அசோக்காந்தா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை-இந்திய மக்களுக்கு இடையில் கூடுதலான தொடர்புகள் பேணப்பட வேண்டுமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற இந்திய சுதந்திர நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தில் தூதரக கிளை அலுவலகங்களை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்தியா அரசாங்கம் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர் , பலாலி விமான நிலைய நிர்மாணம் , திருகோணமலை அனல் மின் நிலைய நிர்மாணம், மன்னார் –தூத்துக் குடிக்கு இடையிலான கப்பல் சேவையை ஆரம்பித்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் இவற்றில் முதன்மையானவை எனவும் குறிப்பிட்டுள்ளார். (6)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று செவ்வாய்க் கிழமை *தலையால் நடந்த...* என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் வ.ஆ.தங்கமயில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(6-4-29)

# மலையகத்தமிழ் மாணவர்களுக்கு தமிழகக் கல்லூரி புலமைப்பரிசில்

கடந்த வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றி, சித்தி பெற்ற, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள தமிழ்மொழி மூல மாணவர்கள் இந்திய கல்லூரியொன்றில் பொறியியல் (இயந்திரவியல், ஊடகவியல், இலத்திரனியல்), கலை மற்றும் வர்த்தக கற்கைநெறியை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில் திட்டமொன்றை தமிழ்நாடு, நாமக்கல் மாவட்ட கோமரபாளயத்திலுள்ள எஸ்.எஸ்.எம் கல்லூரி வழங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை - இந்திய சமுதாயப் பேரவையின் உறுப்பினர்களும் பிரபல தொழிலதிபர்களுமான கே.கருணாகரன், கந்தசாமி செல்லகுமார், டாக்டர் எம்.ராமசுப்பு, மணிமுத்து, முத்துசாமி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பப் பின்னணியிலுள்ள பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுவதாக தெரிவித்த, அவர்கள் முதற்கட்டமாக பொறியியல் கற்கை நெறிகளுக்கு 3 மாணவர்களும் கலை மற்றும் வர்த்தக கற்கை நெறிகளுக்கு 4 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தப்புலமைப் பரிசில், நான்கு வருடங்களைக் கொண்ட பொறியியல் கற்கைநெறிகளான ஊடகவியல், இலத்திரனியல் மற்றும் இயந்திரவியல் ஆகியவற்றுக்கும் மூன்று வருடங்களைக் கொண்ட கலை மற்றும் வர்த்தக கற்கைநெறிகளுக்கும் வழங்கப்படவுள்ளன. (6)

# இருவார கால இந்துப்பூசகர் பயிற்சி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரண்டுவார கால வதிவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ள பூசகர் பயிற்சி இன்று காலை 9 மணியளவில் வெள்ளவத்தை, இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தாஜீ மஹராஜ் ஆசியுரை வழங்கவுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பியசேன சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

திணைக்களத்தின் அழைப்பின் பேரில் மேற்படி பயிற்சிகளை வழங்குவதற்காக தமிழ்நாடு கிராமக் கோவில் பூசகர்கள் பேரவையின் ஆலய வழிபாட்டு முறைப் பயிற்சி முகாம்களின் பொறுப்பாசிரியர் ஏ.கே.சௌந்தரராஜன், சோதிடக் கலையில் சிறந்த பயிற்சியாளரான பசஷி சிவராஜன், தேவார, திருவாசக, பஜனை இசைப்பாடகர் மற்றும் பயிற்சியாளர் ஏ.ஜீவநாதன்ஆகிய மூவரும் இலங்கை வந்துள்ளனர்.

இப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கென தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, நாட்டின் அனைத்துப் பிரதேச ஆலயங்களையும் சேர்ந்த ஏறத்தாழ 75 இந்துப் பூசகர்கள் இப் பயிற்சிகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உரியமுறையில் விண்ணப்பித்து தமது விபரங்களைச் சமர்ப்பித்துள்ள பூசகர்களுக்கு இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்வது தொடர்பான கடிதங்கள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பயிற்சிக்கான அழைப்புக் கடிதங்கள் இதுவரை கிடைக்காத விண்ணப்பதாரிகள் 011-2552642, 011-2552641 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் உடன் தொடர்புகொள்ளுமாறு திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)


# பிறமாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சியில் மீள்குடியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு கிளிநொச்சி மாவட்டமல்லாத பிற மாவட்டங்களில் வாழ்பவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.


இதற்கமைய நேற்று திங்கட்கிழமை திருவையாறு மேற்கு, பாரதிபுரம், மலையாளபுரம், பொன்நகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்கந்தபுரம், காந்திநகர், கோணாவில், அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் ஆகிய கிராமங்களிலும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உருத்திரபுரம் வடக்கு, கிழக்கு, மேற்கு சிவநகர், ஜெயந்திநகர், கனகபுரம் ஆகிய பகுதிகளிலும், 30ஆம்திகதி திங்கட்கிழமை திருநகர் வடக்குத் தெற்கு, கணேசபுரம், பெரியபரந்தன் அம்பாள் நகர் ஆகிய பிரதேசங்களிலும் மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாகவும் இதற்கான பதிவுகள் இராணுவத்தினரால் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)



நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கான 400 நூலக புத்தகங்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 3ஆம் திருவிழா



படங்கள் -அரவிந்

## பாவவினை போக்கும் அரியோனே

வள்ளி தெய்வானையுடன் மயில் மீதினில் ஏறி
எட்டுத் திக்கும் புகழ்பரப்பி வீதிவலம் வரும் - முருகோனே,
உன்னை நம்பியோரின் பாவவினை தீர்க்கும்
யாழ் நல்லூர் பதியுறை வாழ் - அரியோனே,
வட மாநிலத்தில் கொடிய போரைப் போக்கி
நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிய - திறலோனே,
உன் புகழை "பா" வரிகளால் தீட்ட
எட்டுவரிகள் போதாது எண்ணாயிரம் வரிகள் வேண்டுமே- குமரோனே,

க.கனகசபை, சண்டிலிப்பாய்

## நமக்கொரு தீர்வருள நல்லையிலே வருகிறான்

கோரிக்கை நிறைவேற்ற குமரன் வருகின்றான்
குஞ்சரியர் சகிதமாய் குலம்காக்க வருகின்றான்
நாடித் துதிப்பவரின் நலம் காக்க வருகிறான்
நமக்கொரு விடிவுதர நல்லையிலே வருகிறான்
கோடி அன்பர்கள் துயர்தீர்க்க வருகிறான்
கூவும் சேவல் கொடி தாங்கி வருகின்றான்
பாடிப் பரவிடும் பாலசுப்பிர மணியனாய் வருகின்றான்
பக்தர்கள் சூழ பச்சை மயிலேறி வருகின்றான்

மதுரகவி.காரை எம்.பி.அருளானந்தன்

## புகழ் ஓதி நாமும் மகிழ்வோமே

உலகம் மெல்ல விழித்ததுவோ
உள்ளே உவகை கொண்டதுவோ
கலகம் செய்தார் குலமறுக்கும் - அந்தக்
குமரன் கோயில் அழகென்னவோ
வீதியெங்கும் விழாக் கோலம்
விழிகளில் எல்லாம் நீர்க் கோலம்
ஆதி சிவனின் குருநாதன் - அவன்
புகழ் ஓதி நாமும் மகிழ்வோமே

திருமதி ஜெயக்குமாரி கந்தவேள் , கொக்குவில்

## நல்லையில் வாழும் முருகோனே

கயிலைமலை நாதர் அமரர் சிறை மீட்க
கனலில் உரு வாக்கி யளித்தான்
பொய்கைதனில் ஆறு முகங்களொடு தோன்றி
ஆறுமுகசு வாமி யெனவானான்
சூரமகளிர் பாலுண் டுகளித்தத நால
வனுலகுக்கு ஓர்கு மரன்கார்த்திகேயன்
அருள்மிகு ஞானி யர்விரும்பிய மாடம்
மிகுநல்லையில் வாழும் முருகோனே

பா.பாலச்சந்திரன், மயிலணி

ஆறுமுக வேலவா! அனைவருக்கும் அருள்தா!
ஸ்ரீ றங்கன் என்ரப் பிறைஸ்
இல.370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2027

# தி.மு.க. ஆட்சியை விழுத்த வியூகம் ஜெயா செல்வாக்கு வலுக்கிறது

‘கட்டம் கட்டப்பட்டு விட்டார்...’, ‘விரைவில் நீக்கப்படப்போகிறார்...’ என்றெல்லாம் சமீபகாலமாக பரபரக்கப்பட்ட அ.தி.மு.க இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறையின் மாநிலச் செயலாளர் டாக்டர்

கூட்டம் நடத்தும்படி வெங்கடேஷிடம் ஜெயலலிதா சொல்லி இருக்கிறாராம். திருச்சியில் 14ஆம் திகதி நடக்கும் ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு இதற்கான அறிவிப்பை ஜெயலலிதா வெளியிட



ஜெயலலிதாவுடன் அ.தி.மு.க. தலைவர்கள்...

வெங்கடேஷுக்கு கூடுதலாக இன்னொரு பொறுப்பைக் கொடுத்து, பலரைப் பஞ்சராக்கி இருக்கிறார் ஜெயலலிதா.

நிர்வாகிகள் விலகல், இடைத் தேர்தல் தோல்வி என அ.தி.மு.க வரிசையாக வாட்டங்களையே சந்தித்து வந்த வேளையில் தான் கட்சியினரை உற்சாகப்படுத்த இளைஞர் பாசறையைத் தொடங்க உத்தரவிட்டார் ஜெயலலிதா.

அதன் மாநிலச் செயலாளராக வெங்கடேஷ் அறிவிக்கப்பட்ட போதே, “எந்த அனுபவமும் இல்லாத இவரால் எப்படி மாநில அளவில் பாசறையை நடத்த முடியும்?” என முணுமுணுப்புக் கிளம்பியது.

ஆனாலும்,அடுத்தடுத்த பாய்ச்சல்களில் அவர் தன் சக்தியை



மாவட்டங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தி நிரூபித்துக்காட்டினார். இதனாலேயே சசிகலாவின் அத்தனை சொந்தங்களும் கட்டம் கட்டப்பட்டிருக்கும் நிலையில், வெங்கடேஷ் மட்டும் கார்டனின் செல்லப்பிள்ளையாக மாறினார்.

ஆனால், சமீபகாலமாக சொந்தங்கள் தொடங்கி கட்சியின் உள்குத்து புள்ளிகள் வரை பலரும் வெங்கடேஷுக்கு எதிராக புகார் மழை பொழிந்தனர். இந்நிலையில், கடந்த மாதம் வெங்கடேஷ் நிர்வாகத்தில் இருந்த தஞ்சை, திருவாரூர்,நாகை மாவட்டப் பொறுப்பு திடீரென பறிக்கப்பட... கார்டன் கொலுவில் அடுத்த பொம்மையும் அகற்றப்பட்டதாகவே பேச்சு கிளம்பியது. ஆனால், வரும் 18ஆம் திகதியில் இருந்து மாநிலம் முழுக்க விசிட் அடித்து, தேர்தல் பணிகளில் இளைஞர் பாசறை நிர்வாகிகளை எப்படி ஈடுபடுத்துவது என்பது குறித்து

இருக்கிறார். அதன்படி பயணத்தைத் தொடங்க இருக்கும் வெங்கடேஷ், அடுத்த 20நாட்களில் 45 மாவட்ட பாசறை நிர்வாகிகளை சந்திக்க இருக்கிறார். இது குறித்து அ.தி.மு.க-வின். சீனியர் புள்ளிகள் சிலரிடம் பேசினோம்.“எப்போதுமே கட்சியின் சீனியர் புள்ளிகளைத் தான் தேர்தல் திட்டங்களில் அம்மா ஈடுபடுத்துவார். பொன்னையன், ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் உள்ளிட்ட சீனியர்கள் கூட்டணி தொடங்கி பிரசார திட்டங்கள் வரை முடிவெடுத்து அம்மாவிடம் சொல்வார்கள். இந்த முறை இளைய தலைமுறையிடம் தேர்தல் பொறுப்புகளை வழங்க அம்மா திட்டமிட்டு இருக்கிறார் சில நாட்களுக்கு முன் நடந்த இளைஞர் பாசறை மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், ‘வாக்குச் சாவடிகளில் பூத் ஏஜெண்ட்களாக இந்த முறை உங்களைப் போன்ற இளைஞர்களைத்தான் நியமிக்கப்போகிறேன்’ என அம்மாவே வெளிப்படையாகவே அறிவித்தார். இந்தத் தேர்தலில் ‘பணத்துக்கு சீனியர்கள்... பலத்துக்கு இளைஞர்கள்’ என்பது தான் அம்மாவின் திட்டம்.

இளைஞர் பாசறை நிர்வாகிகளோடு,இளைய தலைமுறை தலைவர்களான முன்னாள் அமைச்சர்கள் நெல்லை நயினார் நாகேந்திரன்,விழுப்புரம் சி.வி.சண்முகம்,ஒரத்த நாடு வைத்தியலிங்கம்,திருமயம் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோரும், மாவட்ட வாரியான எதற்கும் அஞ்சாத இளைய புள்ளிகளும் களப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளில் 15க்கும் மேற்பட்ட தொகுதிகளை இழந்தது அ.தி.மு.க. அதற்குக் காரணமே தி.மு.க.வின் பண இறைப்பும், வன்முறைகளும்! கான். அக்கையை அடாவடிகளை

எதிர்கொள்வதற்காகத்தான் அம்மா இளைஞர் சக்தியைக் கையில் எடுத்து இருக்கிறார். சமீபத்தில், சில மாவட்ட இளைஞர் பாசறை நிர்வாகிகளிடம், “தேர்தலில் நீங்கள் முழு வேகத்தைக் காட்டுங்கள்... உங்களுக்கு லட்டு மாதிரியான பதவிகள் காத்திருக்கு” எனச் சொல்லி உற்சாகப்படுத்தினார்.

இடைத்தேர்தல் சமயத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்கிற கள நிலவரத்தை மிகத் துல்லியமாகக் கொடுத்ததால் டாக்டர் வெங்கடேஷ் மீது அம்மாவுக்கு நல்ல மரியாதை உண்டு. 45 மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்து பேசி, தொகுதி வாரியாக கட்சிக்கு இருக்கும் செல்வாக்கு குறித்து ஒளிவு மறைவற்ற உண்மை நிலவரத்தை அம்மாவிடம் வெங்கடேஷ் கொடுக்கப் போகிறார். இதற்கிடையில், 108 சேவை தொடங்கி கலைஞர் வீட்டு வசதித்திட்டம் வரை பலன் பெற்றவர்கள் எத்தனை பேர், அவர்களின் வாக்குகள் எப்படித் திரும்பும், வரும் தேர்தலில் பிரதான வாக்குறுதியாக தி.மு.க. அறிவிக்கப்போகும்திட்டம் (வீட்டுக்கு ஒரு செல்போன் என்பது இவர்களின் பரபர ஊகம்!) வரையிலான அனைத்து விபரங்களையும் வெங்கடேஷ்தான் திரட்டி வருகிறார்.இதை வைத்துத்தான் கூட்டணி,வேட்பாளர் தேர்வு வரையிலான மற்ற விடயங்களை அம்மா ஆரம்பிப்பார்!” எனச் சொன்னவர்கள், “எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு 80 தொகுதிகளில் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கவும் அம்மா முடிவெடுத்து இருக்கிறார்” என்றார்கள்.

இளைஞர் பாசறை நிர்வாகிகள் சிலரோ, “தனக்கு நெருக்கமானவர்களுக்கே பதவி கொடுப்பதாகவும் பண விளையாட்டு நடப்பதாகவும் தன் மீது பரப்பப்பட்ட புகார்களையே தயக்கமின்றி அம்மாவின் பார்வைக்கு வைத்தவர் டாக்டர் வெங்கடேஷ். தஞ்சை, திருவாரூர், நாகை மாட்ட பொறுப்பு பிடுங்கப்பட்டதற்குக் காரணம் அவரது பணிச்சுமைதான். அந்தப் பொறுப்பை வகித்த போது, மாதத்துக்கு 10 தடவையாவது அவர் தஞ்சாவூருக்குப் போக வேண்டி இருந்தது. இதனால் தான் அம்மா அவரை அந்தப் பொறுப்பில் இருந்து மாற்றினார்.


பலவித புகார்களைக் கிளப்பியும் அவரை வீழ்த்த முடியாதவர்கள், ஒரு கட்டத்தில் பெண்கள் சம்பந்தப்பட்ட புகாரையும் பரப்பினார்கள். இது பற்றி

நாங்கள் வருத்தப்பட்ட போது தனது டைரியின் முதல் பக்கத்தில் எழுதி வைத்திருக்கும், “முரட்டு விமர்சனங்கள் ஆயிரம் வரட்டும்... வைராக்கிய உள்ளம் அதனை விரட்டும்” என்கிற வரிகளைத்தான் எங்களிடம் அவர் சுட்டிக் காட்டினார். இப்போது, இளைஞர் பாசறையில் இருக்கும் 38இலட்சம் உறுப்பினர்களையும் தேர்தல்




களத்தில் இறக்கி, வெங்கடேஷ் ஆடப்போகும் கபடியை பொறுத்திருந்து பாருங்கள்!” என்கிறார்கள் உற்சாகமாக.

மீடியாக்களிடம் மறந்தும் வாய் திறக்காத டாக்டர் வெங்கடேஷிடம் போராடிப் பேசினோம். “பாசறைக்கான அனைத்து நியமனங்களையுமே



மாவட்டச் செயலாளர்களோடு கலந்து பேசி அம்மாதான் முடிவெடுப்பார். அப்படியிருக்க என் மீதான குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்க வாய்ப்பே இல்லை. அதனால் அவற்றை நான் சட்டை செய்து கொள்வதும் இல்லை. எத்தனை கவர்ச்சித் திட்டங்களை தி.மு.க. அறிவித்தாலும் விலைவாசி உயர்வு, மின் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளால் தமிழக மக்கள் தாங்கொணா துயரத்தை அனுபவித்து வருகிறார்கள். ஆளும் கட்சி மீதான இந்த அதிருப்தியே அம்மாவின் மகத்தான வெற்றிக்கு வித்திடும். அதற்கு பக்கத்துணையாக இளைஞர் பாசறை எழுச்சியோடு செயல்படும்!” என்றார் வெங்கடேஷ். ✸

## வீட்டுக்கு ஒரு செல்போன் வாக்குப்பெற தி.மு.க.திட்டம்

ஜூனியர்விகடன்

# உயிர் மூச்சினால் ஏற்படும் சிரமங்கள்!

மூச்சுவிடுதல் என்பது நமக்குத் தெரியாமலேயே.. நாம் எந்தத் தனிமுயற்சி எடுத்துக்கொள்ளாமலேயே நிகழும் ஓர் இயல்பான செயல். ஆனால், மூச்சு விடுவதைப் பற்றி நாம் உணர ஆரம்பித்தால்... மூச்சுவிட நம் முயற்சி தேவைப்பட்டால்...தெரிந்துகொள்ளுங்கள் நம்முள் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது... அதைப்பற்றிய ஓர் அலசல்தான் இது...

**முதலில், மூச்சு என்றால் என்ன?**


காற்றில் உள்ள ஒட்சிசன் எனப்படும் பிராணவாயு அல்லது உயிர்பலியை நமது உடலில் இரு நுரையீரல்களின் வழியாக இரத்தத்தில் கலக்கவும்,இரத்தத்தில் மிகுந்துள்ள காபன் -டை-ஒட்சைட்டு எனப்படும் கரியமிலவாயுவை வெளியேற்றி தூய்மைப்படுத்தவும் (Ventilation perfusion) , இயற்கை இப்பூவுலகில் வாழ நமக்களித்த வரப்பிரசாதமே மூச்சு அல்லது உயிர்மூச்சு. மூச்சுவிடுதல் (Respiration) அல்லது சுவாசித்தல் என்பது லயத்துடன் மீண்டும் மீண்டும் நடைபெறும் ஒரு தொடர் செயற்பாடாகும்.மூச்சை உள்ளிழுப்பது உள்மூச்சு (Inspiration) என்றும் வெளிவிடுவது வெளிமூச்சு (Expiration) என்றும் அழைக்கப்படுகிறது.

**நாம் மூச்சை அடக்க அல்லது கட்டுப்படுத்த முடியுமா?**

மூச்சு விடுவதை அல்லது சுவாசித்தலை தற்காலிகமாக சிறிதுநேரத்திற்கு நிறுத்திக்கொள்ளவோ அதன்விகிதம் மாற்றவோ நம்மால் முடியும். மூச்சுப் பயிற்சிகள் மூலம் இதை நன்கு உணரலாம். ஆழ்ந்து விரைவாகவோ அல்லது மெல்லவோ மூச்சைஇழுப்பதால் உள்மூச்சை அடக்கலாம்.

பேசுவதால், பாடுவதால்,சீட்டி அடிப்பதால் (Whistling) வெளிமூச்சை இடைமறிக்கலாம். நாம் ஏதேனும் சிறிய அல்லது கடினமான வேலை செய்யும்போது மூச்சானது மிக ஆழ்ந்தும் மிக வேகமாகவும் இருக்கும்.

மூச்சு மண்டலப் பாதுகாப்பு அனிச்சை செயல்களான தும்மல், இருமல் போன்றவற்றின்போதும் மூச்சு விடல் நிகழ்கிறது. தும்பு தூசிகளோ, புகையோ, உறுத்தும் வாயுவோ மூச்சைத்தானாக உள்ளிழுக்கும் செயலை தற்காலிகமாக நிறுத்துகிறது. பின்னர் மூச்சை வெளிவிடுகையில் இருமலோ, தும்மலோ ஏற்படுகின்றன. இத்தகைய



© 2006 Encyclopædia Britannica, Inc.

மூச்சுச்செயற்பாட்டால்தான் நான் முன்பு சொன்ன இருமல்,தும்மல் மட்டுமன்றி, நுகர்தல், பேசுதல், கத்துதல், பாடுதல் மிமிக்ரி செய்தல் போன்றவற்றையும் நம்மால் செய்யமுடிகின்றது.

**சுவாசித்தலைப் பற்றியும் சொல்லுங்கள்?**

சகஜமாக நாம் நம்மையும் அறியாமல் இரு வகைகளில் சுவாசிக்கின்றோம். அவை வயிற்று வகை மற்றும் விலா எலும்புவகை. ஆண்களில் காணப்படும் வயிற்றுவகை மூச்சு உதரவிதானச் சுருக்கத்தால் மார்புக் கூட்டின் அளவு செங்குத்தான நிலையில் அதிகரித்து இயங்குவது பெண்களில் காணப்படும் விலாவகை மூச்சு மற்ற மூச்சுத் தசைகளின் சுருக்கத்தால் மார்புக் கூட்டின் முன்புற, பின்புற பக்கவாட்டு அளவு அதிகரித்து இயங்குவது. சாதாரணமாக வயது வந்தவர்கள் அல்லது பெரியவர்களைப் பொறுத்தவரை எந்த உடல் உழைப்பும் இன்றி ஓய்வாக இருக்கும் போது 16-20 தடவை ஒரு நிமிடத்திற்கு மூச்சை வெளிவிட்டு உள்ளிழுப்பார்கள். குழந்தைகள் ஒரு வயது வரை ஒரு நிமிடத்திற்கு 35 தடவையும் 2ஆம் ஆண்டு வரை நிமிடத்திற்கு 25 தடவையும் சிறார்கள் நிமிடத்திற்கு 20 தடவையும் இளை ஞர்கள் நிமிடத்திற்கு 18 தடவையும் மூச்சு விடுவார்கள்.

**நாம் சுவாசிக்கும் காற்றின் அளவைப் பற்றியும் கூறுங்க ளேன்...?**

பொதுவாக ஓய்வாக உள்ள போது ஒரு சாதாரண உள் மூச்சின் போதும் சகஜமான வெளி மூச்சின் போதும் இரு நுரையீரல்களிற்குள் உட்சென்று வெளிவரும் காற்றின் அளவு ஒவ்வொரு முறை யும் 500 கனசென்ரி மீற்றர் ஆகும். இது அலைக் காற்று எனப்படுகிறது. சகஜமான வெளிமூச்சுக்குப் பின்பு முழுமையான ஆழ்ந்த உள் மூச்சினால் உட்செல்லும் காற்று சாதாரண உள் மூச்சு அளவைவிட ஆயிரத்து 500 கனசென்ரி மீற்றர் அதிக மாகும். இது சேமிப்பு அல்லது பூர்த்தி செய்யும் காற்றாகும்.

மேற்கூறிய மூன்று அளவுகளும் டைடல் நிரப்பு, சேமிப்புச் சேர்ந்து மூச்சுத்திறன் எனப்படுகிறது. இதன் அளவு சராசரி 500+1500+1500 = 3500 கனசென்ரி மீற்றர் காற்றாகும். பொதுவாக இது மூச்சு பயிற்சி, பால் ஆகியவற்றைப் பொறுத்து 4500 முதல் அதிகபட்ச 7000 கனசென்ரிமீற்றர் வரை கூட இருக்கும்.

முழுமையான பலத்த வெளிமூச்சின் பின்பு கூட நுரையீரல்களில் சுமார் ஆயிரம் கன சென்ரிமீற்றர் காற்றுத் தேங்கியிருக்கும். இதை எஞ்சிய காற்று என்றோம்.

இருநுரையீரல்களின் மொத்தக் காற்றுக்கொள்ளளவு ஆண்களுக்கு சுமார் 6லீற்றரும் பெண்களுக்கு சுமார் 4லீற்றரும் ஆகும். வயது வந்த ஒருவர் ஒரு நிமிடத்திற்கு சுமார் 4- 6 லீற்றர் காற்றைப் பெறுகிறார்.முயற்சி அதிகளவு செய்யும் போது இந்தக் காற்று கொள்ளளவு அதிகரிக்கும்.

**மூச்சுச் செயற்பாடு எவ்வாறு நிகழ்கிறது?**

மூச்சை உள்ளிழுக்கும்போது மார்புக் கூட்டின் எல்லாப் பக்க குறுக்களவுகளும் தசை சுருக்கத்தால் அதிகரிக்கிறது. முக்கியமான உதரவிதானம் சுருங்கிக் கீழிறங்குகிறது. செங்குத்தான அளவை அதிகரிக்கச் செய்கிறது.விலா எலும்புகளுக்கிடையில் உள்ள வெளிப்புறத் தசைகள் அனைத்தும் சுருங்குவதால் விலா எலும்புகளை உயர்த்தி முன்னோக்கி இருக்கச் செய்கின்றன. இதனால் மார்புக்கூட்டின்முன், பின் குறுக்களவுகள் அதிகரிக்கின்றன.


டாக்டர் கே.ஏ.மோகன்தாஸ்
சென்னை

இத்துடன் கீழுள்ள விலா எலும்புகளும் வெளிப்புறமாக உயருகின்றன. மார்புக் கூடு அளவு அதிகரிப்பதால் நுரையீரல்களில் உள்ளஅழுத்தம் குறைகிறது.

அதனாலும் காற்று மண்டல அழுத்தத்தாலும் நுரையீரல்களுக்குள் காற்று உட்சென்று நுண்ணிய காற்றுப்பைகளை விரிவடையச் செய்கிறது.இப்படியாக நம்மையும் அறியாமல் நாம் உள் மூச்சை இழுக்கின்றோம்.இந்த Active process நிகழ சக்தி (Energy) தேவைப்படுகிறது.

(தொடரும்)

# 'கசப்பான' சீனி...!



மனிதன் அதிகம் உண்ணும் சத்து இல்லாத உணவுகளில் சீனியும் ஒன்று. உண்மையில் நம்முடைய உடலுக்கு சீனி அறவே தேவையில்லை. உடலுக்கு சக்தி தேவைப்படும் போது இதர உணவுகள் குளுகோஸ் ஆக மாற்றப்படுகிறது.

உடலுக்கு சீனி எந்த சத்தையும் கொடுக்காமல் இருப்பதோடு உடம்பிலுள்ள சத்தையும் ஈர்த்துக்கொள்கிறது. அதனால் தான் இது சத்தில்லாத கலோரி மற்றும் சத்தில்லாத உணவு என்றும் அழைக்கப்படுகிறது.

சிகரெட், மது முதலியவற்றைப் போல் சீனியும் ஆபத்தானது என்றே சொல்லலாம். புற்றுநோய், எலும்பு முறிவு நோய், மூட்டு வியாதிகள், உடல் பருமன், இதய நோய்கள், இரத்த அழுத்தம், சரும நோய்கள், முதுமை , பித்தக்கல், ஈரல்நோய், சி று நீரகக் கோளாறு,சொத்தைப்பல், நீரிழிவு நோய் இப்படி எல்லா நோய்களுக்கும் சீனியும் ஏதாவது ஒருவிதத்தில் காரண மாகிறது. குளிர்ப்பானங்கள், செயற்கை உணவு முதலியவைகளில் சீனி அதிகம் சேர்க்கப்படுகிறது. உங்கள் குழந்தைக்கு குளிர்பானம் ,ஐஸ்கிரீம், சொக்லேட் மற்றும் அளவுக்கு அதிகமான சீனி உள்ள உணவுகளைக் கொடுப்பதன் மூலம் உங்கள் குழந் தையை நீங்களே நோயாளியாக உருவாக்குகிறீர்கள் என்று அர்த்தம்.

இனிப்பும் கொழுப்பும் அதிகம் உள்ள உணவுப் பொருட்கள் இரத்தத்தில் கொழுப்பு அளவை அதிகரித்து விடுவதால் இதய நாளங்கள் அடைபடுகின்றன. இதனால் இரத்தம், ஆக்ஸிஜன் மற்றும் சத்துக்கள் செல்வது தடைப்பட்டு விடுகிறது. இது தொடரு மானால் ஒருவருடைய தசைநார்கள் பாதிக் கப்பட்டு மாரடைப்பு ஏற்படுகிறது.

உடலில் அதிக அளவு சீனி இருந்தால் அதைச் சுத்தப்படுத்த அதிகமான இன்சுலின் வெளியாக்கப்படுகிறது. அளவுக்கு அதிகமாக வெளியாகும் இன்சுலினுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தடுக்கும் ஹார்மோனுக்கும் அதிக தொடர்பு இருக்கிறது.

இது புற்றுநோய் கழலையை உருவாக்குகிறது.

கோப்பி , தேநீரில் ஒரு நாளைக்கு அதிகபட்சம் மூன்று அல்லது நான்கு தேக்கரண்டி சீனியைப் பயன்படுத்துங்கள் போதும். நம்முடைய உடம்பின் ஆரோக் கியத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் . கொல் லும் சீனியை முற்றிலும் தவிர்ப்பதே நல்லது.




# ஒரேஞ்சு அவசியம்...!

எந்த வயதாக இருந்தாலும் பரவாயில்லை... எந்த நோயாளியாக இருந்தாலும் பரவாயில்லை. அவர்கள் தைரியமாக சாப்பிடக்கூடிய பழம் ஒரேஞ்சு! இது உடலுக்கு புத்துணர்ச்சி மற்றும் உறுதியை வழங்குகிறது.


ஒரேஞ்சு சாறில் உள்ள விட்டமின் சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் இளமைத் தோற்றம் உருவா கும்.

தினமும் ஒரேஞ்சு சாப்பிட்டு வந்தால் பசி ஏற்படும். மலச்சிக்கலை நீக்கும். நன்கு ஜீரணமாகும். கழிவுகள் வெளியேறி குடல் சுத்தமாகும்.

மேலும் சளி, ஆஸ்துமா, காசநோய், தொண்டைப்புண் முதலியவை குணமாகும்.

நெஞ்சுவலி, இதய நோய், எலும்பு மெலிவு ஆகியவற்றை குணமாக்கும் ஆற்றல் உடையது ஒரேஞ்சு.

இதில் ஏ,பி,சி.ஆகிய விற்றமின்களும் ஏழு வகையான தாதுக்களும் உள்ளதால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசியம் சாப்பிட வேண்டும். அது மட்டுமன்றி ஒரேஞ்சு பழத்தை குறுக்கே இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து பத்து நிமிடம் கழுவினால் முகம் பளபளப்பாகும்.



# நேபாளத்தில் வேலை நிறுத்தம்; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(காத்மண்ட்)

நேபாளத்தில் அரசியல் சாசன சட்டத்தை வடிவமைக்க வலியுறுத்தி நேபாள உள்ளூர் மக்கள் கூட்டமைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை முழு அடைப்புப் போராட்டம் நடத்தியது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

தலைநகர் காத்மண்டில் மறியலில் ஈடுபட்ட பொதுமக்களும் பொலிஸாருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது.6 வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

நேபாளத்தில் தொடர்ந்து அரசியல் குழப்பம் நிலவி வருகிறது. நேபாள காங்கிரஸ் மற்றும் மாவோயிஸ்டுகள் கட்சிக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையால் புதிய அரசியல் சாசன சட்டத்தை வடிவமைப்பதில் இழுபறி நீடிக்கிறது. இந் நிலையில் அரசியல் சாசன சட்டத்தை விரைவில் வடிவமைக்க கோரி நேபாள உள்ளூர் மக்கள் கூட்டமைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு தழுவிய அளவில் கடையடைப்புப் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்திருந்தது.

இதனால் அரசு மற்றும் தனியார் வாகனங்கள் ஓடவில்லை. கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் கடைகள் திறந்திருந்தன. தொழிற்சாலைகள் இயங்கின

தலைநகர் காத்மண்டில் உள்ளூர் மக்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த ஏராளமானோர் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளியில் இருந்து வந்த பலர் தலைநகரை முற்றுகையிட்டனர். அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலிறுத்தி கோஷம் எழுப்பிய படி நகரின் முக்கிய இடங்களுக்குள் நுழைய முயன்றனர்.

அப்போது கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.நகரின் பல இடங்களில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே வன்முறை ஏற்பட்டது.

வன் முறையில் ஈடுபட்ட 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனங்கள் எரிப்பு தவிர வேறு எந்த அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-4)

## மெக்சிகோ தொலைக்காட்சி நிலையத்தில் குண்டு வெடிப்பு

(மாண்டரி)

மெக்சிகோ நாட்டில் டெலிவிரா எனும் தொலைக்காட்சி செயற்பட்டு வருகிறது. மாண்டரி நகரில் இதன் தலைமை அலுவலகம் உள்ளது. அலுவலக முன் பகுதியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் கட்டடத்தின் முன்பகுதி சேதமடைந்தது. ஆனாலும் யாருக்கும் உயிரிழப்போ., காயமோ ஏற்படவில்லை.

இந்த நிறுவனம் போதை மருந்து கும்பலுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டு வந்தது. எனவே போதை மருந்து கும்பல் இந்த தாக்குதலை நடத்தி இருக்கலாம் என கருதப்படுகிறது.


கடந்த வாரம் இந்த நிறுவனத்தில் 2 நிருபர்களை போதை மருந்து கும்பல் கடத்தி சென்றது குறிப்பிடத்தக்கது. (6-4)

## அமெரிக்க அதிபர் ஒபாமா நவம்பர் மாதம் இந்தியா விஜயம்

அமெரிக்க அதிபர் ஒபாமா எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியா வருகை தர இருப்பதாக அந்நாட்டு அரசு அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கான அமெரிக்க துணை தூதர் சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் அண்மையில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க பயணம் மேற்கொண்டது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறினார்.

மன்மோகன் சிங்கின் அழைப்பை ஏற்று வரும் நவம்பர் மாதம் ஒபாமா இந்தியா வருகை தருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் துணைதூதர் தெரிவித்தார். இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வளர்ப்பதில் அமெரிக்கா மிகுந்த விருப்பம் கொண்டுள்ளதாகக் கூறிய அவர் அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டவருக்கான விசா கட்டணம் அதிகரித்திருப்பதால் இந்தியர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் இருக்காது என்று தெரிவித்தார். (6)



பாகிஸ்தானில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பார்வையிட சென்ற ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கிமூன் இஸ்லாமாபாத் நகரில் பிரதமர் கிலானியை சந்தித்து பேசினார்.

## கலிபோர்னிய கார் பந்தய விபத்தில் எட்டு பேர் பலி



அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் நடைபெற்ற கார் பந்தய போட்டியில் ஏற்பட்ட விபத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட் டுள்ளனர்.

கார் பந்தயத்தில் ஈடுபட்டிருந்த மோட்டார் கார் ஒன்று திடீரென பாதையை விட்டு விலகி பார்வையாளர்கள் மீது மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் மேலும் 12 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கலிபோர்னியாவில் நடைபெற்ற 200 டெசர் நைட் என்ற கார்பந்தய நிகழ்வுகளின் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கார் விபத்தினை மேற்கொண்ட 28 வயதான பிரட்ஸ்லொப்பி என்ற சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் அவர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த விபத்திற்கு காரண மாக ஸ்லொப்பிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அமெரிக்கக் பொலி ஸார் அறிவித்துள்ளனர்.

பாலைவனப் பகுதிகளில் நடைபெறும் இவ்வாறான கார் பந்தய போட்டிகளின் போது வீதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். பாதைக்கு அருகாமையில் இருந்த பார்வையாளர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர். (6)

## தமிழக மீனவர்கள் மூவர் கடலில் மூழ்கிப்பலி

கர்நாடக மாநிலத்துக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 3 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். கர்நாடக மாநிலம் மங்களூர் கடல் பகுதியில் கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தங்கி மீன்பிடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் 4 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை படகு மூலம் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் சீற்றம் ஏற்பட்டு படகு சேதம் அடைந்துள்ளது. நடுக்கடலில் தவறி விழுந்த மீனவர் ஒருவர் மூழ்கிப் பலியானார்.

கரையைக் கடக்க முயன்ற 3 பேரில் 2 பேர் அலையில் சிக்கி உயிரிழந்தனர்.

கரை திரும்பிய ஆனந்த் கொடுத்த தகவலின் பேரில் உயிரிழந்த 3 மீனவர்களின் உடல்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது. ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு பேரின் உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் கர்நாடக கடலோர காவல்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடலில் மூழ்கி உயிரிழந்த 3 பேரும் இராமநாதபுரம் மற்றும் குமாரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். (6)

## பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இராணுவ செலவை குறைக்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபர்ட் கேட்ஸ் அறிவித்துள்ளார்.

இதனால் 5 ஆயிரம் பேர் வேலை இழக்கும் அபாயத்தில் உள்ளனர். அமெரிக்கா கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அந்நாட்டு அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி பல்வேறு வகையில் வீண் விரயம் செய்யப்படுபவதாக அந்நாட்டு நாடாளுமன்றில் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக அமெரிக்கபாதுகாப்பு அமைச்சர் றொபர்ட் கேட்ஸ் , அந்நாட்டு நாடாளுமன்றில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

கடந்த 2001 ஆம் ஆண்டு பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு பின் வரவு , செலவுத்திட்டத்தில் இராணுவத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது பன்மடங்கு அதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இராணுவத்திற்கு வரவு, செலவுத்திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது.

இதற்கு தகுந்தாற் போன்று இராணுவம் மற்றும் உளவுப்பிரிவுகளின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. அந்த நிதி பல வழிகளில் விரயமாக செலவு செய்யப்படுகிறது.

எனவே பாதுகாப்புத் துறையில் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்படி பென்டகன் பல்வேறு நாடுகளில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் கூட்டுப் படை முகாம்களில் சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அயல்நாடுகளில் உள்ள தேவையில்லாத இராணுவ முகாம்களை அடையாளம் கண்டு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவ ஒப்பந்தகாரர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் 10 சதவீதம் குறைக்கப்படும். ஆப்கானிஸ்தானில் நிலைமை சீரடைந்தால் 2011 ஆம் ஆண்டு முதல்படிப்படியாக இராணுவம் விலக்கிக் கொள்ளப்படும். இவ்வாறு றொபர்ட் கேட்ஸ் கூறினார். இந்த நிலையில் கேட்சின் அறிவிப்புக்கு அதிபர் ஒபாமா பாராட்டு தெரிவித்துள்ளார்.

மேலும் அதிலிருந்து சேமிக்கப்படும் நிதி இராணுவத்தை நவீனப்படுத்தும் பணிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார். (6)

## பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கி இருக்கிறான்

### அமெரிக்கா தகவல்

பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கி இருக்கிறான் என்று அமெரிக்க வெளியுறவு மந்திரி ஹிலாரி கூறி இருந்தார். இதற்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்தது.

இந்த நிலையில் அமெரிக்க இராணுவ தளபதி டேவிட் பென்ராஸ்சும் பின்லேடன் பாகிஸ்தானில் தான் இருக்கிறான் என்று கூறியுள்ளார்.

நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

அல்கொய்தா தலைவர் பின்லேடனை கொல்வது இன்னும் எங்களுடைய முக்கிய இலக்காக உள்ளது. அவனை கொல்வதன் மூலம் உலகத்தில் தீவிரவாதத்தை ஒழிக்க வழி வகுக்கும்.

பின்லேடன் .இப்போதும் பாகிஸ்தானில் தான் பதுங்கி இருக்கிறான். அங்குள்ள மலை கிராமங்களில் இரகசிய இடத்தில் தங்கி இருக்கிறான். ஆனால் அவன் தங்கி இருக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (6-4)

கண்ணீரின் பாஷை அழுத கண்கள் உடைய வனுக்கு மட்டும் தான் தெளிவாகப் புரியும்.
- இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சொற்ப விலையில் விலை போகுது எங்கள் அரும் பொக்கிஷங்கள்

நேற்று முன்தினம் இரவு விஜய் தொலைக் காட்சியில் ஒரு நிகழ்ச்சி. அதில் தமிழர்களுக் கென்று கலாசாரம் உண்டா என்ற விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

நேரத்துக்கு நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கத் தெரி யாது. உரிய நேரத்துக்கு சமுகம் கொடுக்கத் தெரியாது. மனித உரிமைகளை பேணவும் மதிக் கவும் பழகவில்லை. குப்பைகளை வீதியில் கொட் டும் குப்பைப் பழக்கம் வேறு.

பொய், களவு, கொலை இவை மேலதிகம். இப்படியிருக்கும் போது தமிழர்களுக்கென கலா சாரம் உண்டெனக் கூறுவது எங்ஙனம் பொருந் துமென ஓர் அன்பர் விளாசித்தள்ளினார்.

மேற்குலகின் நேரமுகாமைத்துவம், மனித உரிமை மற்றும் பிறரை மதிக்கும் நேயம், பிறரைப் பற்றி அவதூறாகப் பேசாமை, தன் கடமை மீது பற்று, விசுவாசம், திட்டமிடல் ஒழுங்குபடுத்தல் என எத்தனையோ கலாசார உயர்வுகள் அங் குள்ளன, என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது எங்களிடம் இருக்கக் கூடிய கலைப் படைப்புகள், சிற்ப ஓவியங்கள், ஆலயங் கள், அருங்கலை பொக்கிஷங்கள் என பட்டிய லிட்ட ஒருவர் இவற்றையெல்லாம் நாம் மறந்து பேசக் கூடாது எனக் கூறினார்.

இந்த விவாதத்தை பார்த்தபோது எங்கள் நினைப்பு வந்தது. எங்களிடம் அவர் கூறியதும் இல்லை. மற்றவர் கூறியதும் இல்லை.

வெறுவிலிகளாக மட்டுமே நாம் இருக்கின் றோம். இருக்கின்ற அற்ப சொற்பங்களும் சொற்ப விலைகளில் ஏ-9 கடந்து தென்பகுதிக்கு போகும் பரிதாபம்.

பழைய செம்பு, பித்தளைச் சருவம், கமண் டலம், கெண்டி, நிலைகதவு, கோயில் வாகனங் கள், வண்டில்கள், அந்தக்காலத்துப் பாத்திரங் கள் என அனைத்தும் தராசில் நிறுத்து கிலோக் கணக்கில் விற்பனையாகின்றது.

நேற்றுக் கூட, இரண்டு வில்லு வண்டில்கள் லொறி மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப் படுவதாக பேராசிரியர் ஒருவர் கவலையோடு தெரிவித்தார்.

அந்த இரண்டு வில்லு வண்டில்களையும் விலைக்கு வேண்டிச் செல்வதாக தென்பகுதிக்கு எடுத்துச் செல்லும் அந்த சகோதரர்கள் தெரிவித் தார்கள்.

என்ன செய்வது! இதுதான் எங்கள் தலை விதி. அந்தக்காலத் தொழில் நுட்பத்தில் பித்தளை யை அதிகமாகப் பயன்படுத்தி உருவாக்கிய வில்லு வண்டில் ஏ-9 கடந்து போவதைக் கண்டு வேதனைப்பட முடியுமே அன்றி, எங்கள் முன் னைய சொத்துக்களை கொள்வனவு செய்து அவற்றை பேணிப் பாதுகாக்கும் திட்டங்கள் எதுவுமில்லை.

நிலைமை இதுவாகத் தொடருமாயின் எங்கள் வாழ்வியலின் அடையாளங்கள் எங்களை விட்டு எங்கோ காட்சிப் பொருளாக-பெறுமதி மிக்க பொருளாக அலங்கரிக்கப்படும்.

என்ன செய்வது! வாருங்கள் எங்கள் வர லாற்று விரும்பிகளே! கட்டியழுவோம்.

அட, பழைய ஒப்பாரிக்கும் இப்போ பூரண தட்டுப் பாடு. வாருங்கள் 'சிணுங்குவோம்'. இது தானே எங்கட லேட்டர்ஸ்.

## லீக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள அணிகள்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்ன ணிக்கழகங்கள் பங்குபற்றி வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டிகளில் 10 அணிகள் லீக் போட்டிக ளுக்கு தகுதி பெற்றுள்ளன. இதில் ஏ பிரிவில் வதிரி டைமன் அணி, அல்வாய் மனோகரா அணி,இளவாலை யங்கென் றிஸ், கரவெட்டி நவசக்தி,நவிண்டில் கலைமதி ஆகிய அணி களும் பி பிரிவில் குருநகர் பாடுமீன் அணி ,ஊரெழு றோயல், சக்கோட்டை சென்சேவியர்,உரும்பிராய் சென்மைக்கல் , நாவாந்துறை கலைவாணி ஆகிய அணிகள் இப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

இதில் ஒரு அணி 4 போட்டிகளில் மோதவுள்ளதுடன் இறுதிப்போட்டியில் சம்பியனாகும் அணிக்கு 20ஆயிரம் ரூபா பணப்பரிசும்,2ஆம் இடத்தைப்பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும் 3ஆம் இடத்தைப்பெறும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கேடயமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-24)

## பாடசாலை மாணவர்களுக்கான ரிக்கிரி மூலிகைத்தோட்டப்போட்டி

(அல்வாய்)

2010 ஆம் ஆண்டு ஆயுள்வேத ஆண்டாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனை முன்னிட்டு நாடு பூராகவும் உள்ள பாடசாலை சிறார்களுக்கிடையில் ரிக்கிரி மூலிகைத்தோட்டப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண் ணப்பங்களைத் தத்தம் வலயக்கல்விப்பணிமனை அலுவல கங்களில் அபிவிருத்திப்பிரிவில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களுக்கிடையே சித்த ஆயுள்வேத முறை மற்றும் மருந்து மூலிகைகள் தொடர் பான விருப்பத்தினை ஏற்படுத்துமுகமாகவே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (6-19)

## சித்த ஆயுர்வேத நடமாடும் சேவையை நடத்தக்கோரிக்கை

வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மணற் காடு ,பொற்பதி,குடத்தனை,அம்பன் வெளிச்சந்தி போன்ற கிராமங்களில் வசித்து வருகின்றனர்.

இப்பகுதி மக்களுக்கு என பருத்தித்துறைப்பிரதேச சபை யினால் இலவச சித்த ஆயுர்வேத நடமாடும் சேவை வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெற்றது. ஆனால் கடந்த ஒரு மாத காலமாக இவ் வைத்திய சேவை இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்நடமாடும் சேவை மணற்காடு இடைத்தங்கல் முகாமில் இடம்பெற்று வந்ததாகவும் இதனால் முகாம் மக்கள் பெரும் நன்மை அடைந்ததாக குறிப்பிடப்படுகிறது. எனினும் தற்போது இச்சேவை இடம்பெறுவதில்லை எனவும் இத னால் மக்கள் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்படு கிறது.

மேலும் இம்முகாம்களில் உள்ள கழிவுகளும் சீராக அகற்றப்படுவதில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது. இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு பகுதி பொது அமைப்புகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை இதற்காக எந்தவொரு நட வடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக் கின்றனர். (6-63)

## ஒழுக்காற்று விசாரணைக்காக ரங்கே பண்டாரவுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மற்றும் மாகாண சபை உறுப்பினர் சாந்த அபேசேகர ஆகியோர் கட்சியின் ஒழுக் காற்றுக்குழுவின் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார தாக்கப்பட்டமை தொடர்பில் ஒழுக்காற்று விசாரணையை நடத்துவதற்கே இவ்வாறு இருவரும் அழைக்கப்பட்டுள்ளத்தாக தெரியவருகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி இவ் விசா ரணை இடம்பெறவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக தெரிவித்தார். (6-4)

# சுற்றுலாத்துறையினருக்கு வடக்கில் காணிகள் வழங்குவது குறித்து ஆய்வு

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாண தீவுப் பகுதிகளில் ஹோட்டல்கள் அமைப் பதற்காக சுற்றுலாத்துறையைச் சேர்ந்தோருக்கு காணிகளை வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தலைமையில் யாழ்ப்பா ணத்தில் கைத்தொழில்பேட்டை நிறுவுவது தொடர்பான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று அலரிமாளிகை யில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்ப வர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் சில வாரங்களுக்கு முன்னர் கைத்தொழில்பேட்டை நிறுவுவது தொடர்பான முதலாவது கூட்டம் ஆளும் தலைமையில் நடைபெற்றது.

இதில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட நாட்டின்பல பாகங்களிலிருந்தும் முதலீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

வளங்களைப் பயன்படுத்தி சிறந்த தரம்மிக்க பொருட் களை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்வதே இத் தொழில் பேட்டையை நிறுவுவதன் பிரதான நோக்கமெனவும் ஆளுநர் கூறினார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள தீவுப்பகுதிகளில் ஹோட் டல்களை அமைப்பதில் முதலீட்டாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டி வருவதனால் சுற்றுலாத்துறையைச் சேர்ந்தோருக்கு நிலங் களை பகிர்ந்தளிப்பது குறித்தும் ஆராய்ந்து வருவதாக ஆளு நர் தெரிவித்தார்.

அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக சுட்டிக்காட்டிய அவர் மிக விரைவில் தீவுப் பகுதிகளில் சுற்றுலா மையங்களாக மாற்றியமைக்கப்படுமெனவும் குறிப் பிட்டார். (6)

## மினுவாங்கொடை வீடொன்றில் சட்டவிரோத சிகரட்டுகள் மீட்பு

(கொழும்பு)

மினுவாங்கொட வீடொன்றிலிருந்து 50 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரட்டுக்களை கலால் திணைக் களத்தினர் மீட்டுள்ளனர்.

இவை சீனாவிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டு வரப் பட்டவை என்றும் இவற்றுடன் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்துள்ளதாக கலால் திணைக்களப் பேச்சாளர் எஸ். டி. பிரபாத் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட பகுதியிலிருந்து பிரபல வர்த்தகர் ஒரு வரின் வீட்டிற்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த சட்டவிரோத சிகரட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

கலால் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவ லொன்றின் அடிப்படையில் திணைக்களத்தின் அதிகா ரிகளும் பொலிஸ் போதைவஸ்து குற்றத்தடுப்புப் பிரிவின் அதி காரிகளும் இணைந்து குறித்த வீட்டில் மறைத்து வைக்கப் பட்டிருந்த சிகரட்களை கண்டுபிடித்துள்ளனர்.

22இலட்சத்து 50 ஆயிரம் சிகரட்டுக்கள் மீட்கப்பட்டுள்ள துடன் முற்றுகையின் போது குறித்த வீட்டிலிருந்த உரிமை யாளர் மற்றும் அவரது உதவியாளர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (6)

## சுவாமி விவேகானந்தரின் ஆசிமொழிகள்



★ பிறருக்குத் தொண்டு செய்வதால் எவர் உடல் அழிகிறதோ, அவர்கள் பாக்கியசாலிகள் இந்த ஒரு பிறவியையாவது தொண்டுக்காகப் பயன் படுத்துங்கள். வேதாந்தம் தத்துவசித்தாந் தங்களை அடுத்த பிறவியில் கற்றுக்கொள்ளலாம்.

★ அரிய செயல்களைச் செய்பவர்கள் தனக் கென்று எந்த உரிமையையும் கேட்பதில்லை உதவாக்கரை மனிதர் களே தனக்கென இலாபம் என்று சிந்தித்துக்கொண்டிருப்பர்.

★ கடவுள் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ கண் முன் இருக்கும் கடமைகளைச் செய்யுங்கள் இது ஒன்றே ஒவ் வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டிய முதல்பாடம்.

★ தன்னைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கும் சுய நலம் தான் மிகப்பெரிய பாவம். மற்றவர்களுக்கு முன் முக்தி பெறவேண்டும் என்று நினைப்பது கூட சுயநலம் தான்.

★ தவறு செய்யாதவர் யாருமில்லை. ஆனால், தவறை மீண்டும் செய்வது கூடாது. செய்த தவறை மற்றவர்கள் மிகைப் படுத்தும் முன்னால் அதை ஒத்துக்கொள்வது உயர்ந்த பண்பு.

★ அடக்கம் இல்லாத மனமே ஒருவனது கொடிய பகை வன். ஒரு முகப்பட்ட மனமே உற்ற நண்பன்.


5 மில்லியன்
பெறுமதியான பரிசுகள்!
700 க்கும் அதிக
வெற்றியாளர்கள்
STAR POINTS
Ex STAR vaganza
"ExSTARvaganza" மூலம் இலட்சாதிபதியாகுங்கள்!
WIN என டைப் செய்து 141 க்கு SMS செய்யுங்கள்
2010 செப்டெம்பர் 5 ஆம் திகதி
STAR POINTS
Earn More, Spend Less.



உங்களது நன்மதிப்புப் பெற்ற
S.P.N. Motors
தற்போது விற்பனையில்
Safari Motor Cycle
எஸ்.பி.என் மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


தற்போது, வங்கியொன்று
அடகிற்கு வழங்கும்
அதி கூடிய
தொகையை சம்பத்
வங்கி வழங்குகின்றது
கெரட் 24ற்கு 30,000/-
கெரட் 22ற்கு 27,000/-
வியாபாரச்சந்தையின் அதிகுறைந்த
மாதாந்த 1.17% வட்டிக்கு
சம்பத்
றண்திரிய
அடகுச் சேவை
அழையுங்கள்: 0112 30 30 50
சம்பத் வங்கி
SampathBank


ESWARRAN
Traders & Transport Service
யாழ். → கொழும்பு
யாழ். ← கொழும்பு
பயணிகள் சொகுசு
பஸ் சேவை
No.115,69, Kasthurlar Road, Jaffna.
T.P: 021 - 2222813 / 021 - 2224317
E-mail: gmsc@sltnet.lk
201B, Dam Street, Colombo 12.
Tel : +94 112 433 889
Fax : +94 112 435 247
கிளிநொச்சியில்
ஈஸ்வரன் ரேடர்ஸ் &
ரான்ஸ்போட்
ஈஸ்வரன் ரேடர்ஸ்
இல.115, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


A-star புதிய நட்சத்திரத்தின் உதயம்
எமது காட்சியறைகளில் A-star வை பார்வையிட்டு இன்றே உங்களது கனவு வாகனத்தை
முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
K - Series engine
துரித அழைப்பு - 0772 245719/ 0716 896909
கொழும்பு குருநாகலை இரத்தினபுரி கண்டி
மாத்தறை நீர்கொழும்பு அம்பாறை
SUZUKI
Way of Life!
AMW
அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
E-Mail - dhanika.rodrigo@amwltd.com
Web - www.amwltd.com

# சேவாக் அற்புதம் ; இந்தியா ஜொலித்தது இலங்கை சகல துறையிலும் சொதப்பல்



(தம்புள்ள)
சேவாக்கின் அதிரடி ஆட்டத்தின் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் தம்புள்ளவில் நடைபெற்று வருகிறது.

இத் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணியை நியூசிலாந்து அணி வீழ்த்தியதுடன் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி நியூசிலாந்து அணியை வெற்றி கொண்டது.

இந் நிலையில் தொடரில் மூன்றாவது போட்டி நேற்று நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் சறுகியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தரங்க போட்டியின் முதலாவது பந்தில் ஓட்டமெதனையும் எடுக்காமல் பிரவீன்குமாரின் பந்துவீச்சில் நேரடியாக போல்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார 02, மஹேல ஜெயவர்த்தனா 04, திலான் சமரவீர 07 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 12.4 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது தடுமாறியது.

இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்த போதும் ஒரு முனையில் டில்சான் சிறப்பாக ஆடினார். அடுத்துக் களமிறங்கிய மத்யூஸ், டில்சானுக்கு சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார்.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது திலகரட்ண டில்சான் 62 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 45 ஓட்டங்களை எடுத்து பிரக்ஜன் ஓஜாவின் பந்துவீச்சில் ரோகித் சர்மாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கபுகெதர களமிறங்க மறுமுனையில் மத்யூஸ் 15 ஓட்டங்களுடன் ரவீந்திர ஜடேயாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களில் ராண்டீவ், குலசேகர ஓரளவு பிரகாசிக்க இலங்கை அணி 46.1 ஓவர்களில் 170 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ராண்டீவ் 61 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 43 ஓட்டங்களையும், குலசேகர 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரக்ஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் பிரவீன்குமார், இஷாந்த் சர்மா, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நெகர ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 171 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்–கார்த்திக் ஜோடி நிதானமாக ஆரம்பத்தை வழங்கினார்.

இதில் தினேஷ் கார்த்திக் 10 ஓட்டங்களுடன் மத்யூஸின் பந்துவீச்சில் குலசேகரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய விராட் ஹோலியும், றோகித் சர்மாவும் பூச்சியத்துடன் வந்த வேகத்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினர்.

இந் நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சேவாக்–ரெய்னா ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கி நம்பிக்கையளிக்க இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் சுரேஸ் ரெய்னா 21 ஓட்டங்களுடன் பெர்ணான்டோவின் பந்துவீச்சில் தரங்கவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 21.5 ஓவர்களில் 91 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டை இழந்தது.

இந் நிலையில் இணைந்த சேவாக்–தோனி ஜோடி அதிரடியான ஆட்டத்தை வழங்க இந்திய அணி 34.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 171 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் வீரேந்திர சேவாக் 100 பந்துகளில் (11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 99 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகேந்திரசிங் தோனி 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் மத்யூஸ், பெர்ணான்டோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி ஒரு போனஸ் புள்ளியுடன் 5 புள்ளிகளை பதிவு செய்து இரண்டாமிடத்திலுள்ளது. இலங்கை அணி மூன்றாமிடத்துக்கு பின்தள்ளப்பட்டது.

இப் போட்டியில் வீரேந்திர சேவாக் சதம் பெறும் வாய்பிருந்த போதும் ராண்டீவ் வீசிய பந்து முறையற்ற பந்தாக (No Ball) மாற இந்திய அணிக்கு உதிரியாக ஒரு ஓட்டம் கிடைத்தது. இதன் மூலம் வெற்றியிழக்கை அடைந்தது இந்திய அணி.

# வடக்கில் டெங்குத்தடுப்பு வாரத்தை தீவிரமாக அனுஷ்டிக்க வேண்டும்

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் டெங்குத்தடுப்பு வாரத்தை வடக்கிலும் தீவிரமாக அனுஷ்டிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய டெங்குத் தடுப்பு செயலணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 16.10.2010–22.10.2010 வரையான வாரம் நாடளாவிய ரீதியில் தேசிய டெங்குத்தடுப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வடமாகாண டெங்குத் தடுப்பு செயலணிக்குழுவின் தலைவர் வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கமைவாக டெங்குத் தடுப்பு வாரம் வடமாகாணத்திலும் தீவிரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்மாவட்டத்தில் பல பகுதிகளிலும் டெங்குநோயின் பரம்பல் அவதானிக்கப்படுகின்றது. மேலும் யாழ்மாவட்டத்தில் தற்போது பல ஆலயங்களில் உற்சவங்கள் நடைபெறுவதாலும், பாடசாலை விடுமுறைக்காலமாக இருப்பதாலும் தென்பகுதியில் இருந்து ஏராளமான மக்கள் யாழ்மாவட்டத்திற்கு வருகைதருகின்றனர்.

யாழ்மாவட்ட மக்களும் பெருமளவில் விடுமுறைக்காலத்தில் தென்பகுதிக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில் யாழ்மாவட்டத்தில் டெங்குநோயின் பரம்பல் தீவிரமடைய வாய்ப்புள்ளது.

எனவே யாழ்மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து டெங்குத்தடுப்பு வாரத்தில் பின்வரும் டெங்குத்தடுப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

☆ சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள், வணக் கத்தலங்கள், பொது இடங்கள் யாவும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

☆ சகல வீடுகளும் உரிமையாளர்களால்/குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

☆ தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவுசெய்ய ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

☆ பராமரிப்பு இன்றியுள்ள காணிகள்/ வீடுகள் உரிமையாளர்கள்/ குடியிருப்பாளர்களால் துப்புரவுசெய்யப்படல் வேண்டும்.

☆ கழிவு நீர் வாய்க்கால்கள் சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

☆ டெங்கு வாரம் பற்றிய விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் சுகாதார வைத்திய அதிகாரிகள்/உள்ளூராட்சி மன்றங்களால் ஏற்படுத்தப்படும். இது ஒலி பெருக்கி மூலமான அறிவித்தல்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

☆ ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவிலும் பிரதேச செயலகமும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு அமைக்கப்படல் வேண்டும்.

இக் குழு தமது பிரதேசத்தை சுற்றிப்பார்வையிட்டு டெங்குத்தடுப்பு செயற்பாடுகள் திருப்திகரமாகவும், பூரணமாகவும் இடம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்த வேண் டும். டெங்குத் தடுப்புச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் காணப்படும் நிறுவனத் தலைவர்களுக்கு அல்லது வீட்டு உரிமையாளர் களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே யாழ்மாவட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு தடுப்பு வாரத்தில் தடுப்புச் செயற் பாடுகளை முன்னெடுத்து எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயில் இருந்து பாது காப்போம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரமற்ற முறையில் விற்பனை செய்த உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய சூழலில் சுகாதாரமற்ற முறையில் விற்பனை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் யாழ். மாநகர சபையின் சுகாதார உத்தியோகத்தர்களினால் பறிமுதல் செய்யப்பட்டது.


நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்ஸவ காலத்தில் சுகாதார சேவையை மேம்படுத்து முகமாக நேற்று மாநகர சபையின் சுகாதார உத்தியோகஸ்தர்கள் உணவு விற்பனை நிலைய பரிசோதனையை மேற்கொண்ட சமயம் இலையான் மொய்த்த நிலையில் சுகாதாரமற்ற, மனித பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்பட்ட 900 கிராம் தேன் முறுக்கு 10 கிலோ மஸ்கட் மற்றும் 35 கிலோ அழுகிய உருளைக்கிழங்கு என்பன பறிமுதல் செய்யப்பட்டு உரிமையாளரின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டதுடன் மேலும் இவ்வாறான குற்றங்கள்செய்யப்படும் இடத்து சட்ட நடவடிக் கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டனர்.

யாழ். மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப்பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர்களான எம்.விஜயகுமார், பி.ஆறுமுகதாசன், பி.யோசப் ஆகியோர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச–5)


## கேபிள் TV இயக்குனர்களுக்கான கலந்துரையாடல்

இலங்கை முழுவதும் கேபிள் TV ஒளிபரப்பு உரிமம் பெற்ற Sky Cable (Pvt)Ltd. நிறுவனத்தின், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் Network Manager ஆக நியமிக்கப்பட்டுள்ள Tenstar Network(Pvt)Ltd. நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த கேபிள் TV இயக்குனர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் நடைபெற இருக்கின்றது. அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற அழைக்கின்றோம்.

இடம் : Jaffna Technical Institute (JTI)
இல. 45, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
காலம்: 17. 08. 2010
நேரம்: காலை 11.00 மணி
T.P.: 0772233282
0773276504
0777917790
(2189)




நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ இரண்டாம் நாள் திருவீதியுலாக் காட்சிகள்.

## மொபெட்ஸ்...

அமுல்படுத்தவுள்ளதாகவும் இதை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## முன்னாள்...

அவர்களைப் பயன்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து ஓடியதாகக் கூறப்படும் இந்தப் 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் இராணுவ செயல்பாடுகள் இயக்குநரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரின் அறிக்கைகளை குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்காக இராணுவத்திலிருந்து ஓடியவர்களை சேர்க்க பொன்சேகாவுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்று இவர்கள் கூறியிருந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த பொன்சேகாவையும் அவரது செயலாளரையும் வரும் ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-5)

## தமிழ்த்...

அரங்கத்தின் தூதுக்குழு வொன்று சந்தித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கவுள்ளதாக அவர் தெரிவித் தார்.

இதேவேளை தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திலிருந்து கலந்து கொள்வதற்கான எவ்வித அழைப்பிதழும் தமது கட்சிக்குக் கிடைக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை.சேனாதிராசா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழ்க் கட்சிகளின் பேச்சு...

வர் இரா.சம்பந்தன் இந்தியாவுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ளதாகவும் அவர் நாடு திரும்பிய தன் பின்னரே தீர்மானம் எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஈ.பி.டி.பி. மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் கடந்த வாரம் மட்டக்களப்பில் கூடி தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்ந்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பேச்சு வார்த்தைகளுக்கு அழைப்பது எனக் குறித்த தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன. 13-வது திருத்தச் சட்ட மூல அமுலாக்கம் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைப்பதென தமிழ் அரசியல் கட்சிகள் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கொக்குவில் பகுதியில் நேற்றிரவு...

நேற்று மதியத்திலிருந்து அப்பகுதியில் தளபாட விற்பனையில் ஈடுபட்டனர். இந் நிலையில் நேற்றிரவு 7 மணியளவில் அவர்கள் நின்ற இடத்துக்குச் சென்ற குழுவொன்று அவ் விளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் வாள்களினாலும் வெட்டியுள்ளனர்.

அத்துடன் லொறியையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதில் படுகாயமடைந்த மொறட்டுவ கொறல்லவெல்லப் பகுதியைச் சேர்ந்த கமால் (வயது-26), சஞ்சீவ (வயது-16) ஆகிய இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நிஷான் (வயது-28) என்பவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

லொறிக்கு வைக்கப்பட்ட தீ உடனடியாக அணைக்கப்பட்டது. இச்சம்பவத்தினையடுத்து அப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை வியாபாரப் போட்டியின் காரணமாகவே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையின் மூலம் தெரிய வந்ததாக இராணுவத்தினர் கூறினர். (ச-5)

## இலங்கை...

தமிழ்க் காங்கிரஸ் பேச்சாளர் டேவிற் பூபால பிள்ளை தெரிவித்துள்ளார்.

சிரமமான நீண்ட பயணத்தின் பின்னர் கனடா சென்றடைந்த அகதிகளைத் தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்திருப்பது அவர்களுக்கு உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை மேற்படி குடியேற்றவாசிகள் நாட்டுக்கு அச்சுறுத்தலான குழுவா? இல்லையா? என்பதை விட அவர்கள் மனிதர்களாக நோக்கப்பட வேண்டும் எனத் தமிழ்க் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் கெரி ஆனந்த சங்கரி கோரியுள்ளார். (ச-5)

## கனடா...

கவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோய் காரணமாக குறித்தநபர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் கடலில் எறியப்பட்டதாக சக புகலிடக் கோரிக்கையாளர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஈழத்...

சன் சீ என்ற கப்பலில் 490 ஈழத் தமிழர்கள் சுமார் 3 மாத காலப் பயணத்திற்குப் பிறகு கனடாவை அடைந்தனர். இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் என்றும் ஆகவே இவர்களுக்கு அகதி அந்தஸ்து கொடுக்கக் கூடாது என்றும் இலங்கை அரசு நிர்ப்பந்தித்து வந்தது.

அந்தக் கப்பலில் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர் வினோத் என்பவர் உள்ளார் என்றும் அவர்தான் ஆயுதக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டவர் என்றும் கனடாவில் உள்ள இலங்கை அதிகாரி சித்திராங்கனி வாகீஸ்வரா கூறியுள்ளார்.

இதையடுத்துக் கனடாக் கடற்படையினர் கப்பலில் சோதனை நடத்தினார்கள். பின்னர் அவர்களைக் கூடாரங்களில் அடைத்து வைத்துள்ளனர்.

அவர்களிடம் விசாரணை நடந்து வருகின்றது. ஈழத் தமிழர்கள் யார் வந்தாலும் விடுதலைப்புலிகள் என்று பார்க்கக் கூடாது. இதில் பெண்களும் குழந்தைகளும் உள்ளனர்.

உண்மையிலேயே இலங்கையில் வாழும் சூழ்நிலையிருந்தால் இத்தனை தூரம் பெரும் கஷ்டப்பட்டு வரவேண்டிய அவசியம் தேவையில்லை என்று இம் மக்கள் மீது பரிதாபப்படும் கனேடியர்களே கூறுகின்றார்கள்.

மூன்று மாதக் கடல் பயணத்தின் போது போதிய உணவின்றி இவர்கள் தவித்துள்ளார்கள். ஒரு நாளுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே சாப்பிட்டுள்ளார்கள்.

இதையுணர்ந்த கனடாவில் உள்ள தமிழ் இயக்கத் தலைவர் காத்பனா நாகேந்திரா என்பவர், கப்பலில் வந்த தமிழர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவித்துள்ளார்கள். அவர்கள் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை.

அங்கு செல்வதை விட கடலில் இருந்து இறப்பதே மேல் என்று தெரிவித்தார்கள். கப்பலில் எந்த விடுதலைப்புலிகளும் வரவில்லை என்று உறுதியளித்துள்ளார். (ச-5)


## ஆட்கள் தேவை

❋ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)
❋ ஒவ்செற் பயிலுநர்கள் (ஆண்கள்)

யாழ்ப்பாணத்தை அண்மித்திருப்பவர்கள் இன்று காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**வலம்புரி**
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


உயர்தரப் பரீட்சையை எழுதிக் கொண்டிருக்கும் தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் பரீட்சை சிறப்புற அமைய எனது வாழ்த்துக்கள்.

**புதிய பாடத்திட்டம்**
**தமிழ்**
**பிரபல தமிழாசிரியரால்**
**விசேடமாகக் கற்பிக்கப்படும்.**

உயர்தரத்தில் உயர்ந்த பெறுபேற்றுக்கு ஒரே வழி அழையுங்கள்
0774047219, 0217900668 (2190)
குறிப்பு : O/L மாணவர்களும் குழுவாக இணைந்தால் கற்பிக்கப்படும்.


## மரண அறிவித்தல்

S V M



S V M

## சண்முகம்-விசுவநாதர்-முருகேசு
## S.V.MURUGESU

(❖ நெல்லியடி ❖ கிளிநொச்சி ❖ யாழ்ப்பாணம் ❖ கொழும்பு பழம்பெரும் புகழ்வாய்ந்த தொழிலதிபர்)

களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலக்கம் 04, எலிபன்டல் அவனியூ, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் S.V.Murugesu, கொழும்பு S.V.M. (PVT) Ltd. ஸ்தாபனங்களின் ஸ்தாபகரும் தர்மவள்ளலும் சிவத்தொண்டனும் ஆகிய பழம் பெரும் புகழ்வாய்ந்த தொழிலதிபர் அமரர் S.V.Murugesu அவர்கள் நேற்று 16.08.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு மிகப் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு.குணரத்தினம் (மகன்)
மேலாண்மைப் பணிப்பாளர்,
S.V.Murugesu,
154, Hospital Road, Jaffna

தொலைபேசி இலக்கம்:
021 222 8899
021 222 2202

(C-881)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.